# அருளறம் பூண்ட அண்ணலார்

ஆசிரியர்:

வித்துவான், G. மைக்கேல், M. A.

(Paper used: 24 lbs. White printing)

ஜெகசெல்வன் கம்பெனி

தெப்பக்குளம் | இராமவர்மபுரம்

ப்பள்ளி | நாகர்கோவில்

1963 [விலை ரூ. 80 ந.பை.

04 : 33
N59-5
112851

முதற் பதிப்பு :—அக்டோபர், 1959
இரண்டாம் பதிப்பு :—மே, 1960
மூன்றும் பதிப்பு :—மார்ச்சு, 1963
நான்காம் பதிப்பு :—மே, 1963
ஐந்தாம் பதிப்பு :—ஜூலை, 1963

APPROVED FOR CLASS USE—NON-DETAILED STUDY
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 18—5—'60, Page 18]

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TIRUCHIRAPPALLI-1-1963.

# முகவுரை

மனித குலத்தை வாழ்விக்க வந்த மகான் கௌதம புத்தர். அவர் மனமொழி மெய்களால் தூய்மையுற்று, வாய்மை வழி நின்று, மன்பதை உய்யத் தொண்டாற்றினர். அவரது வரலாறு பூசலும் பிணக்கும் மிகுந்து அணுக்குண்டும் நச்சுப் புகையும் மலிந்துவரும் இன்றைய உலகை உய்விக்க வல்லது. இதை உணர்த்தவே, பாரதம் புத்தரின் சின்னமான சக்கரத்தைத் தன் கொடியில் கொண்டுள்ளது. எனவே, பாரதப் பண்பாட்டின் சிகரமான—இலட்சியங்களின் தெள்ளிய தீபமான—புத்தரது வரலாற்றைக் கற்பவர் மனக்கண்முன் சிறந்த ஓவியங்களாகத் திகழ வைத்தலே நோக்கமாகக்கொண்டு இந்நூலே எழுதலானேன். இந்நூல் சிறப்பாக இளமாணவர்களே மனத்துட் கொண்டு எழுதப்பட்டமையால், அவர்கட்கு உகந்தவாறு, இனிய எளிய நடையில் இயன்றுள்ளது. இதனைக் கற்கும் மாணவர்கள் அழகிய தமிழ்நடை எழுதும் ஆற்றல் பெறுவதோடு, தெளிந்த சிந்தையும், தேர்ந்த ஞானமும், உயர்ந்த ஒழுக்கமும் பெற்றுப் பொலிவெய்துவார்கள் என்பது உறுதி.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தனயர் பிறப்பும் தாயின் மறைவும் | ... | 1 |
| 2. | இளமையும் இன்பமும் | ... | 11 |
| 3. | துன்பக் காட்சியும் துறவு எண்ணமும் | ... | 20 |
| 4. | தொண்டுள்ளமும் துறவுக்கோலமும் | ... | 27 |
| 5. | மாதவ முனிவரும் மகத மன்னனும் | ... | 35 |
| 6. | கடுந்தவமும் கருத்து மாற்றமும் | ... | 42 |
| 7. | புதிய உண்மைகளும் புத்த பதவியும் | ... | 48 |
| 8. | அறவாழி உருட்டலும் சங்கம் நிறுவலும் | ... | 54 |
| 9. | புனிதச் செலவும் புத்தமத உபதேசமும் | ... | 60 |
| 10. | சிறு நிகழ்ச்சியும் சீரிய கருத்தும் | ... | 71 |
| 11. | அரும்பணி ஆற்றலும் பெருநெறி அடைதலும் | ... | 76 |
| 12. | பௌத்தம் பாரெங்கும் பரவியது | ... | 87 |



# 1. தனயர் பிறப்பும் தாயின் மறைவும்

## தோற்றுவாய் :

உலகத்தில் உயிர்கள் எடுக்கும் பிறவிகளுள் சிறந்தது மனிதப்பிறவி. மனிதப் பிறவியின் மாண்பினை,

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது"
"மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே"

என்று ஆன்றோரும், அறிவுறுத்தினர். மனிதப் பிறவி எடுத்தாருள்ளும் அறிவு விளக்கம் பெற்று, அதன் வழி ஒழுகுவாரே மாண்புடையவராவர். அவர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் இயற்கை வாழ்வு வாழ்வர். அவ்வாழ்வே நம் நாட்டு அறநூல்கள் எடுத்துரைக்கும் அருள் வாழ்வாகும். இவ்வருள் வாழ்வு வாழ்ந்த பெரியார் பலரைப் பெற்றெடுத்த பெருமை நம் பாரத நாட்டிற்கு உண்டு. இந்த நூற்றுண்டில் காந்தியடிகளாரது வாழ்வு இவ்வாழ்விற்கு எடுத்துக்காட்டாய் இலங்கியது. தமிழ்ச் சான்றோர்களான திருவள்ளுவர், அப்பர், இராமலிங்கர், தாயுமானவர் போன்ற பெரியார்களும் இவ்வருள் வாழ்வு வாழ்ந்தவர்களே. இவர்களைப் போலவே கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் அருளறம் பூண்ட அண்ணலாராய்

விளங்கினர் புத்தர் பெருமானர். அவரைச் சாத்த னர் என்னும் புலவர் பெருந்தகை,

" தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையின்
அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன் "

என்று பாராட்டினர். இவ்வாறு தமிழ்ப்பெரு மகனர் ஒருவரால் பாராட்டப்பட்ட புத்தரது புனித வரலாற்றைப் படித்துணரும் பேறுடைய தமிழ் மாணவர் தவ மாணவரேயாவர்.

## நாடும் நகரமும் :

பழமையும் பெருமையும் மிக்க பாரதத்தின் வடபால் வானுறவோங்கி நிற்பது இமயமலை. அம் மலையடிவாரத்து நாடுகளுள் உத்தரகோசலம் என்னும் நாடு, எத்திசையும் புகழ் மணக்க இலங் கியது. அது நேப்பாளத்தின் தென்பால் கங்கை யின் எல்லைவரை அமைந்திருந்தது. கங்கையின் கிளை நதிகளுள் ஒன்ருன உரோகிணியாறு அந் நாட்டை வளப்படுத்தியது. அவ்வாற்றங்கரையில் கபிலவாஸ்து என்னும் நகர் கவினுற விளங்கிற்று. அந்நகரமே உத்தரகோசலத்தின் தலைநகரமாய்த் திகழ்ந்தது. அது கபில முனிவரால் தோற்றுவிக் கப்பட்டமையால் அப்பெயர் பெற்றது என்பர். கபிலவாஸ்து என்பதற்குக் கபிலரது பட்டணம் என்பது பொருள்.

**பெற்ருேர் :**

சுமார் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னர், சுத்தோதனர் என்னும் மன்னர் கபில வாஸ்துவைக் கோநகரமாகக்கொண்டு உத்தர கோசலத்தை ஆண்டுவந்தார். அவர், ' அறநெறி முதற்றே அரசின் கொற்றம்,' என்பதை உணர்ந்து, தம் நாட்டை ' வறிஞன் ஓம்புமோர் செய்யெனக்' காத்து இனிது அரசு செய்தார். அம்மன்னர்க்கு முன்னோர் ' சாகமரங்கள் ' மிகுந்த நாட்டில் வாழ்ந்திருந்தமையால் சாக்கியரென்றும், கோதமர் என்பாரது குடியில் வாழ்ந்தமையால் கௌதமர் என்றும் வழங்கப்பட்டனர். அம்மாண் புடையோர் மரபில் வந்த சுத்தோதன மன்னர் கோலிய நாட்டு அரசிளங்குமரியர் இருவரைத் திருமணம் புரிந்தார். அவர்களுள் மூத்தவள் *மாயாதேவி*; *இளையவள் கௌதமி*. இளைய வளைப் *பிரஜாவதி* என்றும் வழங்குவர். மூத்தவ ளான மாயாதேவி எல்லா நலன்களும் ஒருங்கே அமையப் பெற்றவளாய்—குணத்திற்சிறந்த கோமகளாய்—மன்னர் மனங்கவரும் மாண்புடைய வளாய் விளங்கினுள். இவளே புத்தரைப் பெற் றெடுக்கும் பேறுபெற்ற புனிதவதி.

**கவலேயும் கனவும் :**

சுத்தோதன மன்னர் எல்லாப் பேறுகளும் பெற்றிருந்தும், மக்கட்பேறுமட்டும் பெற்ருரில்லே. இனிய மழலே மொழியால் மகிழ்ச்சியூட்டும் மக் களேப் பெருதார்க்கு இவ்வுலகில் இன்பமில்லே யல்லவா? இதுபற்றியன்ருே ஆன்ருேர்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

"மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே"

என்று தாம் உணர்ந்த உண்மையை எடுத்து மொழிந்தனர்? ஏனவே, அறிவறிந்த மக்களை—மயக்குறும் மக்களைப்—பெற்றெடுக்கும் பேறு பெருத மன்னர் மனங்கலங்கினர். 'தாயாகும் பேறு நமக்கு வாயாது போய்விடுமோ!' என்று மன்னர் தம் மனைவியரும் மனமழிந்தனர்.

ஆண்டுகள் பல ஒன்றன்பின் ஒன்ருக ஓடிக் கொண்டிருந்தன. மாயாதேவிக்கு வயது நாற்பத்தைந்து. ஒரு நாள் இரவு அவள் கண்ணுறங்கும் பொழுது வெண்ணிற வேழமொன்று தன் வயிற்றினுள் புகுந்ததாகக் கனவொன்று கண்டாள். அப்போது அத்தேவிகொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அப்பெருமகிழ்ச்சியால் விழித்தெழுந்த தேவி, தான் கண்ட கனவைத் தன் கணவனிடம் உரைத்தாள்.

*மறையவர் உரை:*

கனவு நினைவின் தோற்றமென்பர் பலர். ஆயினும்—அது வருவதை உணர்த்துவதென்று நம்புவாரும் உளரல்லரோ! பொழுது புலர்ந்ததும் கனவு நூல் வல்ல மறையவர் பலர் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டனர். சுத்தோதனர் மறையவருக்கு மாயாதேவி கண்ட கனவை எடுத்துக்கூறி அதன் பலனை வினவினர். மறையவர் கனவு நூல்களை ஆராய்ந்து அக்கனவின் பலனை விரித்துரைத்

தனர்; மாயையின் மணி வயிற்றில் ஆண் மகவு பிறக்கப் போவதை அறிவித்தனர். அவர்கள் உரையைச் செவிமடுத்த மன்னர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்; நற்செய்தி உரைத்த நான்மறையாளர்க்குப் பொன்னும் பொருளும் பரிசளித்து அனுப்பினர்.

*தனயர் பிறப்பு :*

கனவு நனவாகும் காலம் நெருங்கியது. மாயை மணி வயிறு வாய்க்கப் பெற்று ஒன்பது திங்கள் கடந்தன. அவள் பேற்றிற்குத் தன் பிறந்தகம் செல்ல விரும்பினள். மன்னரும் அவள் விரும்பியவாறு விடை கொடுத்தார். இன்றும் பெண்கள் பிள்ளைப் பேற்றிற்குப் பிறந்தகம் செல்லும் வழக்கம் இருக்கின்றதல்லவா? இது பண்டு தொட்டுப் பாரத நாட்டில் இருந்து வரும் வழக்கம் போலும்! மாயாதேவி தேவதகா நகரிலுள்ள தன் தந்தையாரது அரண்மனைக்குச் செல்லப் புறப்பட்டாள். வழியில் அவள் மன்னர்க்குரிய உலும்பினிச் சோலையில் (*Lumbini gardens*) ஓய்வு கொண்டாள். அந்த மலர்ச்சோலை அவளது கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது. அங்கு மலர்ச் செடிகள் பன்னிற மலர்களைப் பூத்து நின்றன; குயில்கள் இன்னிசை பாடியும் மயில்கள் தோகை விரித்தாடியும் மகிழ்ச்சியூட்டின. மாயை தன் விழிகளுக்கும் செவிகளுக்கும் விருந்தளித்த அச் சோலையின் இனிய காட்சிகளில் ஈடுபட்டு இன்புற்றிருந்தாள். அப்போது அவள் தனக்குக் கருவுயிர்க்கும் காலம் நெருங்கியதை உணர்ந்தாள்;

அருகே நின்ற ஓர் அசோக மரத்தடியில் சென்று ஒதுங்கினாள். தோழியரும் ஏவல் மகளிரும் தொடர்ந்து சென்று பணி புரிந்தனர். அழகிய ஆண் மகவு ஒன்று பிறந்தது. "இலை தீய்ந்து கொடி வாடி இல்லை என்று போமிடத்தே, சருகு உதிர்த்துப் பழம் பழுத்த சாதிப் பலாப்பழம்" போல வந்து பிறந்த மகவினைக் கண்ட மாயாதேவி மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கினாள். அம்மகவு பிறந்த நாள் ஈசான சகாத்தம், 68-ஆம் ஆண்டு, வைகாசித் திங்கள், பௌர்ணமி திதி என்பர்;

"இருதிள வேனிலி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவயிற்
போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து"

என்று சாத்தனார் அருளிய மணிமேகலை என்னும் நூல் அக்காலத்தைக் கணிக்கின்றது. குழந்தை அந்தப் புனித நாளில் பிறந்த போதிலும், மாளிகையில் பிறக்க வேண்டிய குழந்தை மரத்தடியில் பிறந்தது பலருக்கு வருத்தத்தை விளைவித்தது. அப்படிப் பிறந்தமையாலேதான் அக்குழந்தை மீண்டும் மாளிகை வாழ்வைத் துறந்து மரத்தடி வாழ்வை நாடியதோ என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

## வரவேற்பு விழா :

மாயை ஆண்மகவைப் பெற்றெடுத்ததைச் சுத்தோதன மன்னர் அறிந்தார். அவர் வாழ்க்கைப் பயன் அன்றே நிறைவுற்றதாக எண்ணி மகிழ்ந்தார்; மகனை மாளிகைக்கு அழைத்து வரப்

புறப்பட்டார். பரிவாரங்கள் புடை சூழ, மங்கல ஒலிகள் முழங்க உலும்பினிச் சோலையை அடைந் தார். அரசிளங்குழவி மாநகருக்கு வரும் செய்தி எங்கும் பரவியது. மாநகர் முழுவதும் மகிழ்ச்சி யாரவாரம் மிகுந்தது. மாந்தரும் மகளிரும் அரசிளங்குழவியை வரவேற்கும் விருப்பத்தால் நகரை நன்கு அலங்கரித்தனர்.

"மாநகர் வீதி விளக்கிநின்றார்—குலை
வாழைகள் வாசலில் கட்டிநின்றார்
வானுயர் தோரணம் நட்டுநின்றார்—எங்கும்
வாசமெழுபன்னீர் வீசி நின்றார்"

என்னும் கவிமணி வாக்கில், அவர்கள் நகரை அலங்கரிக்கும் ஆரவாரம் கேட்கின்றதல்லவா? அன்று நகரெங்கும் வரவேற்பு விழாக் காட்சி பொலிந்து விளங்கியது. அரசிளங்குழவி அரண் மனைக்கு அழைத்து வரப்பட்டது. மன்னரும் அவர் உறவினர்களும் வந்தவர்களுக்கெல்லாம் விருந்து நடத்தி, ஏழைகளுக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கி மகிழ்ந்தார்கள்.

*பாராட்டுரை :*

அரசிளங்குழவியைக் காண முனிவரும் பிற ரும் அணியணியாய் வந்துகொண்டிருந்தனர். அவ்வாறு வந்தவருள் அசித முனிவர் ஒருவர். அவர் இமயமலைச் சாரலில் தவம்புரிந்திருந்த சான் றோர்; முக்காலத்தையும் உணரவல்ல மூதறிஞர். அவர் உலகை உய்விக்க வந்த உத்தமக் குழந்தை சுத்தோதனரது மாளிகையில் இருப்பதை உணர்ந் தார்; அத்தெய்வ மகவைக் காணும் வேட்கையால்

அரண்மனையை நோக்கி விரைந்தார். அசித முனிவரது வரவுணர்ந்த சுத்தோதன மன்னர், அவரை அன்புடன் வரவேற்று, இருக்கை நல்கினர். முனிவர் இருக்கையை வேண்டாது, குழந்தையை மும்முறை வலம் வந்து,

"மதலாய்! நின்னடி மலரினைத் தொழுதேன்!
அவனே நீயாம்; ஐய மிதற்கிலை;
உண்மை ஒளியால் உள்ளிருள் போக்கி
நன்மை விளைக்கும் ஞாயிறு நீயே!"

என்று வாழ்த்தி நின்றார். முனிவர் செயல் மன்னருக்கு வியப்பினை அளித்தது. குழந்தை எதிர் காலத்தில் எய்தப் போகும் புத்த பதவியை உணர்ந்தே முனிவர் இவ்வாறு செய்தார் போலும்! முக்காலமும் உணர வல்ல முனிவர் அல்லரா அவர்! மேலும்! அசித முனிவர் அரசரை நோக்கி,

"மன்னர் மன்னவ! மானிடத் தருவில்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்
ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்;
மலரிதன் மணமே அறிவின் மணமாய்
மனத்தின் மாசு மாற்றிடும் ஐயா!
மலரிதன் மதுவே அருளின் மதுவாய்
மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும் ஐயா!
இம்மா மகனை ஈன்றவர் போல,
மாதவம் செய்தோர் மாநிலத்து உண்டோ?"

என்று பாராட்டுரை பகர்ந்து சென்றார்.

## பெயர் சூட்டு விழா:

குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் பெயர் சூட்டு விழா, பல வகையில் சிறக்க நிகழ்ந்தது. மன்னர்

சிந்தைக்கினிய தம் சிறுவருக்குச் சித்தார்த்தர் என்று பெயர் சூட்டினர். கௌதமர் அவர் குலப் பெயர் அன்ருே? ஆகையால், குழந்தையை எல்லாரும் சித்தார்த்த கௌதமர் என்று வழங்கி வந்தனர். பெயர் சூட்டு விழாவிற்கு வந்திருந்த மறையவருள் எண்மர் நிமித்திகர். அவர்கள் சித்தார்த்தருக்குச் சாதகம் கணித்துச் சோதிடம் கூறினர்கள்; 'சித்தார்த்தர் இல்வாழ்க்கையில் இணைந்து நின்ருல், இவ்வுலகை ஒரு குடைக்கீழ் ஆளும் அரசராவர்; துறவை நாடி நின்ருல் புத்த ராவர்,' என்று புகன்றனர். மேலும் அவர்கள், சித்தார்த்தரது சிந்தனையைத் தூண்டும் சில காட்சிகளை எடுத்துக் கூறி, அவை அவர் கண் முன் தோன்ருதவாறு காத்து அவரை அரசராக்கு மாறு அறிவுறுத்திச் சென்ருர்கள், சுத்தோதன மன்னர் மறையவர் மொழிந்தவாறு சித்தார்த்தரை மன்னராக்கும் முயற்சியில் முனைந்து நின்ருர்.

*தாய் மறைவு :*

மகனர் பிறந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்த மன்னர், துக்கக் கடலுள் மூழ்கும் நிலைமை வந் துற்றது. மகன் பிறந்த ஏழாம் நாள் துயில் கொண்ட மாயாதேவி மீண்டும் விழித்தெழவில்லை. அவள் உறங்கிய வண்ணமே உயிர் நீத்தாள். அவளது மறைவை, "ஈன்ருேள் ஏழாம் நாள் இன்னுயிர் வைத்தாள்" என்று விம்பசார காப் பியம் விளம்புகின்றது. மாயையின் மறைவு மன்னரைச் சோக சிகரத்தில் ஏற்றியது. அவர் உணர்ச்சியின் கொடுமுடியில் நின்று குமுறினர்;

கல்லும் மண்ணும் கலங்குமாறு கண்ணீர் வடித்தார்; குழந்தையைக் காக்கும் வகையறியாது கலங்கினர். என் செய்வார் பாவம்! வேறு வழியின்றிக் குழந்தையைச் செவிலித் தாயரிடம் ஒப்படைத்தார். மாயையின் தங்கையாகிய பிரஜாவதி, பெற்ற தாயினும் உற்ற தாயாய் இருந்து குழந்தையைப் பேணி வளர்த்தாள். செவிலித் தாயரும் கண்ணுங் கருத்துமாய் இருந்து காத்து வந்தனர். குழந்தை கண்டோர் வியக்குமாறு வளர்மதியென வளர்ந்து வந்தது. மன்னர் மைந்தர் மதி முகங்கண்டு மாயை மறைவை ஒருவாறு மறந்து வாழ்ந்தார்.

## 2. இளமையும் இன்பமும்

### கல்விப் பயிற்சி :

சித்தார்த்தர் குழந்தைப் பருவம் நீங்கி இளமைப் பருவம் எய்தினர். அப்போது அவர் மித்திரர் என்னும் நல்லாசிரியரிடம் கல்விப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். மித்திரர் 'கலே பயில் தெளிவும் கட்டுரை வன்மையும்' வாய்க்கப் பெற்றவர். அவர் சித்தார்த்தரது இயல்பறிந்து, அவரது எதிர் கால வாழ்வுக்கான விதைகளே அவர் உள்ளத்தில் விதைத்தார். விளேயும் பயிர் முளேயிலே விளங்கித் தோன்றுமல்லவா? சித் தார்த்தர் தமக்கு எழுத்தறிவித்த ஆசிரியரை இறைவனுகவே கருதிக் கற்கத் தொடங்கினர். இவ்வாறு அவர் ஆசிரியரைப் போற்றிக் கற்கத் தொடங்கியது அவரது நல்வாழ்வின் தொடக்க மாய் அமைந்தது. சித்தார்த்தர் மன்னர் மரபில் வந்தமைக்கு ஏற்ப, அவருக்குப் படைக்கலப் பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தன. அப்பொறுப்பைச் சாந்தி தேவர் என்பவர் ஏற்றிருந்தார். அக்கலேயிலும் சித்தார்த் தரே மற்ற மாணவரிலும் சிறந்து நின்ருர். இவ்வாறு அவர் இளமையிற் கற்ற கல்வி, அவர் உயிருக்கும் உறுதுணே செய்யும் கல்வியாய் அமைந்தது,

## நாஞ்சில் விழா :

பண்டு தொட்டு, ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே’ செய்யும் நாடு பாரதநாடு. இந்நாட்டில் மக்கள் தொகையில் முக்காற்பங்கினர் உழவர் என்ருல், இந்நாட்டை உழவர் நாடு என்பதில் தவறுமுளதோ? ஆகையால், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்நாட்டில் உழவர் விழாக் கொண்டாடும் வழக்கம் இருந்து வருகின்றது போலும்! உழவர் விழாவை நாஞ்சில் விழா என வழங்குவர். நாஞ்சில் என்பது கலப்பை. இவ்விழா சுத்தோதன மன்னர் காலத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின்போது அரசர் ஆடையணிகளால் தம்மை அலங்கரித்துக் கொண்டு விளே நிலம் சென்று பொன்னேர் பூட்டி உழுவார். அவரைத் தொடர்ந்து அமைச்சரும் பிறரும் ஏர் நடத்துவர். ஒரே சமயத்தில் ஆயிரம் ஏர்கள் தொடர்ந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கும். இக்காட்சியை மக்கள் பெருந்திரளாகக் குழுமி நின்று கண்டுகளிப்பார்கள்.

## காட்சியும் கருணேயும் :

ஓர் ஆண்டு நாஞ்சில் விழாவிற்குச் சித்தார்த்தரும் அழைத்துச் செல்லப்பட்டார். அவரை நல்லதோர் இடத்தில் அமர்த்தித் தாதியர் காத்து நின்றனர். அவர் எப்படியோ தாதியர் காவலேக் கடந்து, தனி இடத்தை அடைந்து, விழாக் காட்சி

களைக் கவனிக்கலானார். அப்போது அவர் உள்ளம் சுற்றுப்புறக் காட்சிகளில் ஈடுபட்டது. அங்குள்ள இயற்கைக் காட்சிகள் அவர் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்டன. அவர் இயற்கையை ஊடுருவி நோக்கினார்; இயற்கை தன்னலங் கருதாது ஆற்றும் தொண்டின் தூய்மையை உணர்ந்திருந்தார். அவ்வுணர்வு இயற்கை வழி நின்று எதிர்கால வாழ்வை அமைக்குமாறு அவரைத் தூண்டியது. அந்நிலையில் வேறு சில காட்சிகளும் புலப்பட்டன. உழவர்கள் ஏரில் பூட்டிய மாடுகளைத் தாற்றுக்கோலால் குருதி வடிய குத்தினார்கள். பாம்புகள் தவளைகளைப் பிடித்து விழுங்கின. சிலர் அப்பாம்புகளை அடித்துக்கொன்றனர். இவற்றைக் கண்டதும், சித்தார்த்தரது கருணை அந்த உயிர்களிடத்தில் பெருகியது. அவர் அவை படும் துன்பத்தை எண்ணி உருகினார்; உயிர்களின் துன்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டு, ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்தார். "இனிது இனிது ஏகாந்தம் இனிது!" என்பது அவருக்கு அப்போதே புலனாகிவிட்டது போலும்!

### தியான நிலை :

விழா முடிந்தது. நடுப்பகல் வேளையில் அனைவரும் உணவை நாடினர். சித்தார்த்தரைக் காணவில்லை. மன்னர் மயங்கினார், தாதியர் தடுமாறினர். சித்தார்த்தர் தனியிடத்தில் தியானத்தில் அமர்ந்திருப்பதாகச் சேவகர் வந்து கூறினர். மன்னரும் மற்றவரும் விரைந்துசென்று பார்த்தனர்; அவர் தியான நிலையிலிருப்பதைக்கண்டு அனைவரும்

அதிசயித்தனர். இவ்வாறு சித்தார்த்தர் இளமையிலேயே உணர்ந்துருகும் உள்ளமுடையவராய்—தியான நிலை கைகூடப் பெற்றவராய்—விளங்கியது வியப்பன்றோ !

விளையாட்டு :

சித்தார்த்தர் எல்லாக் குழந்தைகளையும் போலவே விளையாட்டில் விருப்பமுடையவராய் இருந்தார். அவருக்கு இருவர் விளையாட்டுத் தோழர் இருந்தனர். ஒருவன், அவர் சிற்றன்னை புதல்வனான நந்தன்; மற்றொருவன், அவர் அம்மான் சேயான தேவதத்தன். சித்தார்த்தர் இவ்விருவரோடும் கூடி உரோகிணியாற்றங்கரையில் பலவித விளையாட்டு விநோதங்களில் ஈடுபடுவார். அக்கால அரசிளங்குமரர்கள் அடிக்கடி வேட்டை மேற் செல்வது வழக்கம். சித்தார்த்தரும் சில வேளைகளில் நண்பர்களோடு சேர்ந்து வேட்டைக்குச் செல்வார். வேட்டையிலும் அவர், கொடிய காட்டு விலங்குகளையும் ஓட்டி விளையாடுவாரேயன்றி, அவற்றைக் கொல்லார்; மற்றவர் கொல்லவும் இடம் கொடார். இவ்வாறு, அவர் இளமையிலேயே உயிர்களைக் கொல்வதன் கொடுமையை உணர்ந்து நடந்துகொண்டது, அவர் அருள் வாழ்விற்குக் கால் கொள்வதைப்போல இருக்கின்றதல்லவா? அவரது இந்த அருள் உணர்வே அவரைப் பிற்காலத்தில் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராக்கியது.

அருள் உள்ளம் :

சித்தார்த்தர் ஒரு நாள் மாலையில் அரண்மனைச் சோலையில் உலவிக்கொண்டிருந்தார். அப்பொழுது அன்னப் பறவைகள் சில வானவீதி வழி வடதிசை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. திடீரென்று ஓர் அன்னப் பறவை அவர்முன் 'தொப்'பென்று விழுந்தது. அதைக் கண்ட சித்தார்த்தர் திடுக்கிட்டார். அவர் விரைந்துசென்று அப்பறவையை எடுத்து நோக்கினர். அதன் உடம்பில் அம்பு தைத்திருந்தது. அவர் அம்பை மெதுவாகப் பிடுங்கிப் புண்பட்ட இடத்தில் தேனும் தளிரும் பிசைந்து பூசினர். அன்னப் பறவை ஆறுதல் பெற்றுக் கண் திறந்தது. அதைக் கண்டதும் சித்தார்த்தரது அருள் உள்ளம் மலர்ந்தது.

உரிமைக் குரல் :

அப்பறவையை எய்து வீழ்த்தியவன் தேவதத்தன். அவன் தன் வில்லாற்றலைக் காட்ட எண்ணி, விண்வழிச் சென்ற அன்னங்களை நோக்கி அம்பொன்றை விடுத்தான். அந்த அம்பு விண்ணென்று சென்று, அரச அன்னத்தின் விலாவிற் பாய்ந்தது. அந்த அரச அன்னமே சித்தார்த்தர் முன்னிலையில் தொப்பென்று விழுந்தது. தேவதத்தன் அப்பறவை சித்தார்த்தரிடம் இருத்தலை அறிந்து, அதைப் பெற்றுவருமாறு தன் சேவகனை அனுப்பினன். சேவகன் சித்தார்த்தரைக்கண்டு தேவதத்தனது கட்டளையைத் தெரிவித்தான்.

சித்தார்த்தர் அப்பறவை தமக்கே உரியது என்று கூறி, அதைத் தர மறுத்தார். சேவகன் தேவதத்த னிடம் நிகழ்ந்ததைத் தெரிவித்தான். தேவதத்தன் சித்தார்த்தரிடம் தானே நேரில் வந்து,

" மடிய நேர்ந்தாலும்—உயிர்த்து
வாழ நேர்ந்தாலும்,
படியில் வீழ்ந்திடுமேல்—பறவை
பாணம் எய்தவர்க்காம் "

என்று உரிமைக் குரலை எழுப்பினன். சித்தார்த் தர் அதன் உயிரைக் காத்த தமக்கே அப்பறவை உரியது என்று வாதாடினர். இருவருக்கும் வாக்கு வாதம் வளர்ந்தது. பறவையின் உரிமைபற்றிய வழக்கு நீதி மன்றத்திற்குச் சென்றது. சாக்கிய குலச் சான்றோர் பலர் நடுவர்களாய் அமர்ந்து வழக்கை ஆராய்ந்தனர். அவர்களுள் முதியவர் ஒருவர் முன்வந்து,

' உயிரைக் காப்பவனே—என்றும்
உயிருக்கு உடையவனும் ;
அயர்வு வேண்டா, ஐயா !—இதுவே
அறநூல் விதிஐயா ! '

என்று முடிவு கூறினர். அவர் உரையின் நேர் மையை அனைவரும் போற்றினர். பறவை சித் தார்த்தருக்கு உரிமை செய்யப்பட்டது. அவர் அப்பறவையை வான வீதியில் பறக்கவிட்டார் ; அது தன் இனத்தோடு சேர்ந்து சென்றதைக் கண்டு சிந்தை மகிழ்ந்தார். இதுபோன்ற பல வாய்ப்புக்கள் சித்தார்த்தரது வாழ்க்கையில் அடுத் தடுத்து வந்துகொண்டிருந்தன. அதனல், அவர்

உள்ளத்தில் உயிர்களிடத்து அன்பும், அதன் வழி அருளும் வளர்ந்து வந்தன.

### இன்ப வாழ்க்கை :

சுத்தோதன மன்னர் மறையவர் மொழிந்த வாறு சித்தார்த்தரை மன்னராக்கும் முயற்சியில் முனைந்து நின்றாரல்லவா? அவர் முதலில் தம் புதல்வரை இன்ப வாழ்க்கையில் ஈடுபடுத்திவிட முற்பட்டார். அதற்காக அவர் மூன்று அழகிய மாளிகைகளைக் கட்டி முடித்தார். அவை முறையே வேனிற்கால, மழைகால, பனிக்காலங்களில் தங்கு வதற்குத் தக்கவாறு அமைக்கப்பட்டன. அம் மாளிகைகளில் சித்தார்த்தரைக் காலவேற்றுமைக்கு ஏற்றவாறு மாறி மாறி வசித்துவரச் செய்தார். அவர் சிந்தனையைத் தூண்டும் துன்பக் காட்சிகள் அங்குத் தோன்றாதவாறு காப்பதற்காகக் காவலர் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். சித்தார்த்தர் வாழ்கையை இன்பமயமாக்குவதற்குப் பணிப் பெண்களும், நடன மாதரும், இசைக் கலைஞரும், நகை வேழம்பருமாக வேறு பலர் அங்கு அமர்த்தப் பட்டிருந்தனர். இந்தச் சூழ்நிலையில் சித்தார்த்தர் இன்பவாழ்க்கை நடத்தி வந்தார்.

### திருமணம் :

மகான்கள் உடல் வாழ்வு வேறாகவும், மன வாழ்வு வேறாகவுமே வாழ்ந்து வருவார்கள். அவர்கள் கூட்டத்திடையே தனிமையையும்,

இன்பத்திடையே துன்பத்தையும் காண வல்ல வர்கள். சித்தார்த்தருக்கு இந்நிலைமை இளமை யிலேயே வாய்த்திருந்தது. அவர் அரண்மனை இன்பங்களை எல்லாம் உடம்பால் அனுபவித் தாரேயன்றி, உள்ளத்தால் அனுபவிக்கவில்லை. அவர் உள்ளம் அடிக்கடி உலகியலைப் பற்றிய சிந் தனையில் ஈடுபட்டு வந்தது. அப்போதெல்லாம் அவர் முகத்தில் துயரத்தின் சாயல் தென்படும். அதைக் காணும்போதெல்லாம் சுத்தோதன மன் னர் மனம் வருந்தினர்; இன்பத்திடையே வாழும் தம் புதல்வர் முகத்தில் துன்பக்குறி தோன்றுவதன் காரணம் தெரியாது கலங்கினர்; நிமித்திகர் கூறி யதை நினைத்து ஏங்கினர். ஆகையால், அவர் மீண்டும் இந்நிலை ஏற்படாதவாறு தடுப்பதற் கான வழியை அமைச்சர்களோடு கலந்து ஆலோ சித்தார். அவர்கள் திருமணமே அதற்கான வழி என்று கூறினர்கள். தவத்தை நாடுவோரையும் தடுத்து நிறுத்த வல்லது பெண்ணாசையல்லவா? அப்பெண்ணாசையை உண்டு பண்ணிவிட்டால், மண்ணாசை தானே வந்துவிடும் என்று மன்னர் நம்பினர். அவர் தம் மைத்துனராகிய சுப்பிரபுத் தர் மகள் யசோதரையைச் சித்தார்த்தருக்குத் திருமணம் செய்யத் தீர்மானித்தார்; சித்தார்த்த ரது இசைவைப் பெற்றார். சித்தார்த்தர் யசோ தரையின் திருமணப் போட்டிகளில் எல்லாம் பங்கு கொண்டார். எல்லாவற்றிலும் அவருக்கே வெற்றி கிடைத்தது. யசோதரை சித்தார்த்தரைச் சிந் தைக்கினிய காதலராகக் கொண்டு மாலை சூட்டி மகிழ்ந்தாள்.

## இல்வாழ்க்கை :

புதுமணத் தம்பதிகளது இல்வாழ்க்கை இன்ப மாளிகையில் தொடங்கியது. யசோதரையின் அன்பும், அழகும், பண்பும், பணிவும் சித்தார்த்தர் சிந்தையைக் கவர்ந்தன. அவர்கள் கருத்தொரு மித்த காதலர்களாய் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் அன்பும் அறமும் வளர்ந்தன, சுத்தோதன மன்னர் அவர்களது இல்வாழ்க்கை இன்பவாழ்க்கையாய் இயங்குவதற்கான சூழ்நிலை களை உருவாக்குவதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்து வந்தார். சித்தார்த்தர் இல்வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் சில ஆண்டுகளிலேயே அனுபவித்துவிடுபவரைப் போன்று வாழ்க்கை நடத்தினர். மன்னர் மகிழ்ந்தார். என்றாலும், நிமித்திகர் கூறிய வாய்மொழி அவரது மனத்தை விட்டு மறையவில்லை.

# 3. துன்பக் காட்சியும் துறவு எண்ணமும்

*சுற்றுலா :*

சித்தார்த்தருக்கு இன்பத்திலும் துன்பத்தைக் காணும் பக்குவநிலை வாய்த்திருந்தது அல்லவா? அவர் இல்வாழ்விலும் அவ்வாறே வாழ்ந்து வந்தார். அவருக்கு நாளடைவில் மாளிகை வாழ்வில் வெறுப்பு மிகுந்தது. அவர் மாளிகைக்கு வெளியே சென்று ஆறுதல் பெற எண்ணினர்; ஒரு நாள் நகரை அடுத்த சோலையில் சென்று உலவி வரப் புறப்பட்டார். சுத்தோதனர் அதற்கான ஏற்பாடு களைச் சிறக்கச் செய்துவைத்தார். இளவரசர் வருகை நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. மக்கள் நகரை நன்கு அலங்கரித்தார்கள். நகரம் கற்பனை உலகோ என்று கருதுமாறு காட்சியளித்தது. சித்தார்த்தர் நான்கு பரிகள் பூட்டிய தேரூர்ந்து நகரவீதி வழிச் சோலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். நகர மக்கள் வாழ்த்தொலி முழங்க இன்முகம் காட்டி இளவரசரை வரவேற்ருர்கள். மக்களது மலர்ந்த முகத்தைக் கண்ட இளவரசர் அவர்கள் மன நிறைவோடு வாழ்வதாக எண்ணி மகிழ்ந்தார்.

*முதற்காட்சி :*

சித்தார்த்தரது தேர் நகர வீதி வழிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது, அங்குத் துன்பக்

காட்சிகள் தோன்ருதவாறு காவலர் கடுகிக் காவல் புரிந்தனர். ஆயினும் என்ன?

"ஊழிற் பெருவலி யாவுள? மற்ருென்று
சூழினும் தான்முந் துறும்"

என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி காவலர் முயற்சிகளையெல்லாம் கடந்துகொண்டு காணக்கூடாத ஒரு காட்சி அங்குத் தோன்றியது. அது மன்பதையின் துன்பத்தை அறிவிக்கும் முதற் காட்சியாய் அமைந்தது.

தெருவின் ஒரு கோடியில் உடலெல்லாம் ஒட்டி நரைத்துத் திரைத்த ஒரு கிழவன் காணப்பட்டான். அவன் தளர்ந்த நடையுடன் தண்டூன்றி, கணீர் கணீரென்று இருமிக்கொண்டு வந்தான்; துன்பமே ஒரு வடிவெடுத்தாற்போன்று தோன்றிருன். அவனது இருமல் ஒலி சித்தார்த்தரது செவியிற்பட்டதும் அவர் அப்பக்கம் திரும்பினுர். அவரது பார்வை கிழவன்மீது பாய்ந்தது. அவர் அவனது அவல நிலையைக் கண்டு துணுக்குற்ருர். அவர் உள்ளத்தை வேதனை ஆட்கொண்டது. அவர் உடல் நடுங்கியது. அவர் சாரதியை நோக்கி, 'தேரை நிறுத்து,' என்ருர். சாரதி தேரை நிறுத்தி, 'ஏன்?' என்ருன். 'அதோ பார்! அஃது என்ன உருவம்?' என்ருர் சித்தார்த்தர். 'கிழவன் உருவம்,' என்ருன் சாரதி. 'கிழவனு!' என்ருர் சித்தார்த்தர். அவரது உள்ளம் கிழவனைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தது.

### ஐயம் அகலல் :

தேர் பூஞ்சோலையை அடைந்தது. சித்தார்த்தர் தேரை விட்டு இறங்கினார். அங்கு மலர்களின் நறுமணம் நாற்றிசையும் கமழ்ந்தது; இமயமலைக் காற்று மெல்லென்று வீசியது. இயற்கை அழகெல்லாம் ஒருங்கே கொண்டு விளங்கியது அச்சோலை. என்றாலும், இளவரசர் மனம் அச்சோலை அழகில் ஈடுபடவில்லை. அவர் உள்ளத்தில் எண்ண அலைகள் எழுந்த வண்ணமிருந்தன. அவர் கிழவனது அவல நிலையை எண்ணி உருகினார்; சாரதியைப் பார்த்து, 'சாரதி, தெருக்கோடியில் கண்டவனைக் கிழவன் என்றாயே? அவன் அவ்வளவு விகார வடிவத்தோடு தோன்றக் காரணம் என்ன?' என்று வினவினார். சாரதி, 'அரசரே, அவன் வயது முதிர்ந்தவன்; பல ஆண்டுகள் உலகில் வாழ்ந்துவிட்டமையால், காலம் என்னும் கள்வன் அவனது அழகைக் கொள்ளை கொண்டுவிட்டான்; ஆற்றலை அழித்து விட்டான். ஆகையால், அவன் விகாரமாய்த் தோன்றுகிறான். வயது முதிரும்போது எல்லாரும் அவனைப்போலவே விகாரமடைவர்,' என்று விளக்கினான். சாரதி கூறிய உரை இளவரசரது ஐயத்தை அகற்றியது.

### இளமைப் பற்று அகன்றது :

சித்தார்த்தர் இளமை நிலையாமையைப்பற்றிச் சிந்திக்கலானார். அவர் உள்ளத்தில் அதைப் பற்றிய எண்ண அலைகள் எழுந்த வணணமிருந்

தன. அவருக்கு இளமையிலிருந்த பற்று அறவே நீங்கியது. அவர் சோலையிலும் அமைதி கொள்ள இயலாமையால், அரண்மனைக்குத் திரும்பினர். தேர் காற்றெனக் கடுகிச் சென்று இன்ப மாளிகையை அடைந்தது. இளவரசர் அங்கும் அமைதி கொள்ளவில்லை. அங்கு நிகழ்ந்த ஆடலும் பாடலும் அவருக்கு ஆறுதலை அளிக்கவில்லை. அவர் உணவிலும் வெறுப்புற்றவராய், முதுமைத் துன்பத்தைப் பற்றியே எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். தம் மைந்தரது மனக்கவலையை உணர்ந்த மன்னர், மாளிகையில் மேலும் இன்பக் காட்சிகளைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

## இரண்டாம் காட்சி:

சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு நாள் இளவரசர் பூம்பொழிலுக்குப் புறப்பட்டார். அன்றும் காவலர் எங்கும் நின்று காவல் புரிந்தனர். நகரமாந்தர் மகிழ்ச்சியோடு அரசிளங்குமரரை வரவேற்றனர். எங்கும் இன்பமே நிறைந்திருந்தது. ஆயினும், எதிர்பாராதவாறு எங்கிருந்தோ நோயினல் நொந்த ஒருவன் இளவரசர் முன் வந்து நின்ருன். அவன் நோயின் கொடுமைக்கு ஆற்ருது அலறினன்; புழுப்போலத் துடித்தான்; பூமியில் விழுந்து புரண்டான். இளவரசர் அவனது துன்ப நிலையைக் கண்டு துயரடைந்தார்; சாரதியைக் காரணம் வினவினர். சாரதி அவன் ஒரு நோயாளி என்பதைத் தெரிவித்து, உடம்பெடுத்தோர் நோயினல் படும் இடும்பையையும் எடுத்து மொழிந்தான்.

இளவரசர், 'இவனைப்போலவே எல்லோரும் நோய்வாய்ப்படுவரோ?' என்று வினவினர். சாரதி, 'ஆம். மாந்தர் அனைவரும் நோய்வாய்ப் படுவது மானிலத்தியல்பு,' என்று இயம்பினன். சித்தார்த்தர், 'மக்களை அலைத்துக் குலைத்து அரித்துவரும் அல்லல்களுக்கு அளவில்லை போலும்!' என்று எண்ணி ஏங்கினர். அவர் உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகென உருகியது. அவர் சிறிது நேரங்கூடச் சோலையில் அமைதி கொள்ளாது அரண்மனை வந்தடைந்தார். அவரது மென்மையான மனம் பிணி மூப்பின் காரணங்களை ஆராய்வதில் அலைந்துகொண்டிருந்தது. அரண் மனைக் கலா நிகழ்ச்சிகள் அவர் கருத்தில் சிறிதும் இடம் பெறவில்லை.

*மூன்றும் காட்சி :*

சித்தார்த்தர் வெளியுலக ஆராய்ச்சியில் ஆர்வங் கொண்டார். அவர் வாழ்க்கை மர்மங்களை அறிவுறுத்தும் அரிய நூலாக வெளியுலகைக் கருதினர். ஆதலின், அவர் வெளியுலக ஆராய்ச்சியில் வேட்கையுடையவராய், வேறொரு நாள் சோலையை நோக்கிப் புறப்பட்டார். தேர் நகரத் தெரு வழிச் சென்றுகொண்டிருந்தது. அன்றும் என்றும் போலவே மாந்தர் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து நின்றனர். காவலர், 'இன்று கோமகனர் கண்களில் துன்பக் காட்சிகள் தோன்றுதவாறு தடுப்போம்,' என்று துணிந்து காவல் புரிந்தனர். ஆயினும், அன்று தோன்றிய காட்சி அவரை முடி துறக்கத் தூண்டும் காட்சியாய் அமைந்தது.

சித்தார்த்தரது தேர் நகரத் தெரு வழிச் சென்றுகொண்டிருந்ததல்லவா? அப்போது எங்கிருந்தோ சங்கொலி காற்று வழி வந்து அவர் காதில் விழுந்தது. அவர் அவ்வொலி வந்த பக்கம் திரும்பினர். சோகக் காட்சி ஒன்று அவர் கண்ணிற் பட்டது. நால்வர் ஒரு பிணத்தைப் பாடையில் வைத்துத் தூக்கிச் சென்றனர். அதைத் தொடர்ந்து உறவினர் முகத்திலும் மார்பிலும் அடித்துக்கொண்டு அழுது சென்றனர். சித்தார்த்தர் சாரதியை நோக்கி, 'அஃது என்ன?' என்ருர். சாரதி, 'அது பிணம்,' என்ருன். சித்தார்த்தருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் விடாது பல வினுக்களை எழுப்பினர். சாரதி எல்லாவற்றிற்கும் விளக்கமாக விடையிறுத்தான். அவனது விடையால், உலகில் பிறவி எடுக்கும் எல்லா உயிர்களும் அடையும் முடிவு அதுவே என்பது இளவரசருக்குத் தெளிவாயிற்று. அவர், 'இன்பத்தை விழையும் உலகம் இறுதியில் எய்துவது இதுவா!' என்று பெருமூச்சு விட்டார். மனம் கலங்கினர். தேர் சோலையை அடைந்தது. சோலைக் காட்சிகளைக் கண்டும் அவரது மனக்கலக்கம் மாறவில்லை. சாரதி ஆறுதல் கூறியும், அவர் அமைதியடையவில்லை. மாலைக் கதிரவன் தன் கதிர்களை ஒடுக்கிக்கொண்டு மறைந்தான். சித்தார்த்தர் பூம்பொழிலை விட்டுப் புறப்பட்டார்; மாளிகையை அடைந்தார். மாளிகையில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளில் அவர் ஈடுபடவில்லை; கலை நிகழ்ச்சிகளில் கருத்தைச் செலுத்தவில்லை. அவர் எப்பொழுதும் நிலையாமையைப் பற்றியே

எண்ணிக்கொண்டிருந்தார். அவ்வெண்ணம் பெருகப் பெருக, வாழ்க்கையில் அவருக்கு வெறுப்பு மிகுந்தது; 'இத்துன்பங்களிலிருந்து உலகை உய்விக்க வேண்டும்,' என்னும் மெய்யறிவு மலர்ந்தது. அவர் நடமாடுங் கோவில்களாகிய மக்கள் உய்யும் வழி காண உறுதிகொண்டார்.

## துறவு எண்ணம்:

சித்தார்த்தர் பின்னொரு நாள் பூஞ்சோலைக்குப் புறப்பட்டார். அன்று அவர் நகரின் மூலை, முடுக்கு, சந்து பொந்துகளிலெல்லாம் உற்று நோக்கிக்கொண்டே சென்றார்; புதுமைக் காட்சி ஏதேனும் தோன்றுகின்றதா என்பதைக் காண்பதற்காகவே அவ்வாறு உற்று நோக்கினர். தேர் சோலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. சிறிது தூரத்திற்கு அப்பால் காவியாடை யணிந்த புத்தம் புதிய மனிதர் ஒருவர் தோன்றினர். அவர் மொட்டைத் தலையோடு கையில் திருவோடு தாங்கி நின்றார். அவரது முகத்தில் அமைதி நிலவிற்று. அவரது கோலம் சித்தார்த்தர் சிந்தையைக் கவர்ந்தது. சித்தார்த்தர் அவரை நெருங்கிப் பேசினர். சித்தார்த்தர் எழுப்பிய வினக்களுக்கெல்லாம் துறவியார் பக்குவமாக விடையிறுத்தார். துறவியாரது உரையால் சித்தார்த்தர் உள்ளத்தில் தெளிவு பிறந்தது; துறவு எண்ணம் எழுந்தது.

# 4. தொண்டுள்ளமும் துறவுக் கோலமும்

## தொண்டுள்ளம் :

சித்தார்த்தருக்குப் பிறவியிலேயே தொண்டுள் ளம் வாய்த்திருந்தது. அவர் கண்ட காட்சிகள் அவரை உலகு உய்யத் தொண்டாற்றுமாறு தூண்டி வந்தன. துறவியாரது சந்திப்பு அவர் உள்ளத்தில் துறவு எண்ணத்தை எழுப்பியது. அதுமுதல் சித்தார்த்தர் சிந்தனைத் தடாகத்தில் மூழ்கிய வண்ணமிருந்தார். அப்போது அவர், இல்லறம் துறவறம் என்னும் இரு நெறிகளைப் பற்றியும் சிந்தித்திருத்தல்வேண்டும். இல்லற நெறி நின்று ஆசை ஆணவங்களுக்கு அடிமை யாகாது, எவ்வுயிரையும் தம்முயிரெனக் கருதித் தொண்டாற்றி வாழும் வாழ்வு சிறந்த வாழ் வன்றோ ?

> " அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின், புறத்தாற்றின்
> போஒய்ப் பெறுவ தெவன் ? "

என்பது வள்ளுவர் வாக்கன்றோ ? எனவே, சித்தார்த்தரும் இல்லறத்திலிருந்து தொண்டாற்று வதை இழுக்கெனக் கருதாது சிறப்பெனவே கருதி யிருப்பர். ஆனால், அவர் தம்மைப் பொறுத்த வரையில், அன்புத் தந்தையாரது இன்பத் துறைப் போகமும், அன்புத் தந்தையாரது இன்பச் சிறை பிடிப்பும் தாம் இல்லறத்திலிருந்துகொண்டு தொண்டாற்றுவதற்கு இடம் தாரா என்று உணர்ந்தமையாலேதான், அவரது தொண்டுள் ளம் துறவை நாடியது. துறவும் தொண்டும்

சேர்ந்து இயங்குவது சாலவும் சிறப்புடையதன்றே !

**கை விலங்கு :**

யசோதரை ஆண்மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள். தூதுவர் சித்தார்த்தரை அடைந்து, 'அரசே, உமக்கு ஆண் மகவு ஒன்று பிறந்துள்ளது,' என்று கூறினர். ஆண் மகவு என்றதும் சித்தார்த்தர் சிந்தை மகிழ்வார் என்பது அவர்கள் எண்ணம். சித்தார்த்தர் தூதுவர் கூறியதைக் கேட்டுச் சிந்தை மகிழவில்லை. அவர், 'இதுவரை கால் விலங்கு பூட்டப்பட்டிருந்தேன் ; இன்று கை விலங்கும் பூட்டப்பட்டேன் !' என்று கூறி நெட்டுயிர்த்தார். குழந்தைக்கு 'இராகுலன்' என்னும் பெயர் சூட்டப்பட்டது. இராகுலன் என்பதற்குக் 'கை விலங்கு போன்றவன்' என்பது பொருள்.

**மனப் புயல் :**

சித்தார்த்தருக்கு வயது இருபத்தொன்பது. உலக நிலையாமை அவர் நெஞ்சை உறுத்தி வந்தது. துறவு மனப்பான்மை நாளுக்கு நாள் வளர்து வந்தது. இந்நிலையில் மகனது பிறப்பு அவருக்கு மனப்புயலை எழுப்பியது. முற்றத் துறந்த முனிவரும் மக்கள்மேற் காதலைக் கடக்க முடியாதல்லவா ? எனவே, சித்தார்த்தர் புதல்வனைப் பிரிந்து துறவுகொள்ளச் சிறிது தயங்கினர். ஆனல், 'பிணி மூப்பு முதலிய துன்பங்களிலிருந்து மக்களை விடுவிப்பது எங்ஙனம் ?' என்னும் வினா அடிக்கடி அவர் உள்ளத்தில் எழுந்து துறவு மனப் பான்மையைத் தூண்டி வந்தது. இந்நிலையில்

அவர் 'இருதலைக் கொள்ளி எறும்பு போலத்' தத்தளித்தார். இறுதியில் துறவு மனப்பான்மையால் அவர் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்.

**துணிவு :**

அன்று இரவு என்றும்போல இன்ப மாளிகையில் இனிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. மேனகைபோன்ற மெல்லியலார் நடனமாடினர். குயில் மொழியினர் இன்னிசை எழுப்பினர். சித்தார்த்தர், இக்கலா நிகழ்ச்சிகளின் நடுவண் அமர்ந்திருந்தார். அவர் உடல் அங்கே அமர்ந்திருந்தது; ஆயினும், உள்ளம் சுட்டிக் காட்டமுடியாத கற்பனை உலகில் அலைந்துகொண்டிருந்தது. அன்றைய கலா நிகழ்ச்சிகள் நீண்ட நேரம் நடைபெற்றன. முடிவில் அனைவரும் தூங்கச் சென்றனர். சித்தார்த்தரும் தூக்கத்தை நாடுபவரைப்போல அங்கிருந்தகன்றார். அவர் தூக்கம் கொள்ளாது சிந்தனை உலகில் உலவிக் கொண்டிருந்தார். அப்போது அவர், 'இளவரசனே, நீ உலகை உய்விக்கும் காலம் நெருங்கி விட்டது. இன்றே இன்ப வாழ்வு என்னும் இச் சிறையிலிருந்து வெளியேறுவாயாக!' என்னும் குரல் தம் காதுகளில் ஒலிப்பதாக உணர்ந்தார்; அவ்வுணர்வால் உந்தப்பட்டு அப்பொழுதே துறவு கொள்ளத் துணிந்து எழுந்தார்.


**மகன் முகங்காணல் :**

துறவு கொள்ளத் துணிந்தெழுந்த சித்தார்த்தர், மகன் முகத்தை இறுதியாக ஒரு முறை பார்த்துவிட்டுப் புறப்பட எண்ணினார். அவர்

அந்தப்புரத்தை அடைந்து யசோதரை உறங்கிக் கொண்டிருந்த அறையினுள் மெல்ல நுழைந்தார். அங்குச் சுற்றிலும் விளக்கெரியத் தூபம் கமழ்ந்து கொண்டிருந்தது. தேவி யசோதரை மலரணை மேல் கண்ணயர்ந்திருந்தாள். குழந்தை இராகுலன் அவள் அன்பணைப்பில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். சித்தார்த்தர் மகனையும் மனைவியையும் உற்று நோக்கினர். அவர் உள்ளத்தில் பந்தமும் பாசமும் பெருக்கெடுத்தன. மகனது களங்கமற்ற முகம் அவர் உள்ளத்தை உருக்கியது. அவர் மகனை எடுத்து மார்போடணைத்து மகிழ எண்ணினர். மகனை எடுத்தால், மனைவி விழித்துவிடுவாள், மனைவி விழித்தால், பாசம் பற்றிக்கொள்ளும். அப்பொழுது அவரது எண்ணத்திற்கு இடையூறு ஏற்படுமல்லவா? ஆகையால், அவர் அவ்வாறு மனைவியின் துயிலை நீக்குவதைவிட உலகத்துயிர்களின் அறியாமைத் துயிலை நீக்குவதே சாலச் சிறந்தது என்னும் முடிவுடன் அங்கிருந்தகன்றூர்.

வெளியேற்றம் :

அன்று ஆனித் திங்கள் வெள்ளுவா நாள். எங்கும் அமைதி நிலவிற்று. அந்த இரவில் சிந்தார்த்தர் **சந்தகன்** என்னும் சாரதியைத் தட்டி எழுப்பினர். சாரதி பணிவுடன் எழுந்து நின்றான். ‘சந்தகா, கண்டகத்திற்குச் சேணம் பூட்டிக் கொண்டுவா,’ என்றார் சித்தார்த்தர். சந்தகன் சிறிது தயங்கினன்; ‘நள்ளிரவில் பயணமா!’ என்று மயங்கினன்; ஆயினும், வேறு வழியின்றிக்



குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினுன். சித்தார்த்தர் புரவி மீதேறிப் புறப்பட்டார். அவர் 'உலகத்துயிர்களின் துன்பம் துடைக்கும் வழி கண்டே திரும்புவேன்!' என்னும் திண்ணிய தீர்மானத்தோடு அரண்மனையை விட்டு வெளி யேறினுர். சந்தகனும் அவரைத் தொடர்ந்து சென்ருன்.

## துறவுக் கோலம் :

சித்தார்த்தர் நகர எல்லையை நீத்துத் தென் கிழக்குத் திசை நோக்கிப் பயணமானுர். இடை யிடையே பந்த பாசங்கள் தோன்றி, அவரது பயணத்திற்குத் தடை விதித்தன. என்ருலும், அவர் உறுதி தளராது பயணத்தைத் தொடர்ந்து நடத்தினுர், குதிரை மின்னல் வேகத்தில் விரைந்துகொண்டிருந்தது. அது இரவோடு இர வாக இருபது கல் தொலைவு சென்றுவிட்டது. அப்போது காலைக் கதிரவன் கதிர் விரிக்கப் போகிருன் என்பதை அறிவிப்பனபோலக் காட்டுக் கோழிகள் கூவின. கண்டகம் கோலிய தேசத் துக்கு அப்பாலுள்ள அநோமை ஆற்றங்கரையை அடைந்தது; அதற்குமேல் செல்ல வழியின்றித் தளர்ந்து நின்றது. சித்தார்த்தர் அதை நன் னிமித்தமாகக் கருதி, குதிரையை விட்டிறங்கினுர். அங்குப் பார்க்கவர் முதலிய முனிவர்களுடைய தவப்பள்ளிகள் இருந்தன. சித்தார்த்தர் அவ் விடத்தையே தாம் துறவு கொள்ளுதற்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தார். அவர் அருகிருந்த ஒரு தவப்பள்ளியினுள் நுழைந்தார். அங்கு யாருமில்லை. ஆனுல், திருவோடு, கமண்டலம், காவியாடை முதலிய தவச் சின்னங்கள் இருந்தன.

அவற்றைக்கண்ட சித்தார்த்தர் அவை தமக்காகவே வைக்கப்பட்டிருப்பதாகக் கருதி மகிழ்ந்தார்; உடனே துறவுகொள்ளத் துணிந்து, முதலில் தாம் அணிந்திருந்த ஆடை அணிகளையெல்லாம் அகற்றினர்; காவியாடை புனைந்தார்; உடைவாளால் தம் தலை முடியை அறுத்தெறிந்தார். திருவோடு தாங்கித் துறவுக் கோலம் பூண்டார். அவரது துறவு ஒரு காலத்தில் மன்னர் பரம்பரையே முடி துறக்கும் என்பதை அறிவிக்கும் அறிகுறியாயிற்றுப்போலும்!

### சந்தகன் பிரிவு:

சித்தார்த்தர் துறவு கொள்வதைத் தடுக்கச் சந்தகன் எவ்வளவோ முயன்றுபார்த்தான். அவர் எதற்கும் அசையாது, உறுதி தளராது, துறவு பூண்டுவிட்டார். சந்தகன், 'நானும் துறவு கொண்டு உங்களோடு வருவேன்!' என்று தாழ்ந்து வேண்டினன். சித்தார்த்தர் அதற்கும் இடம் கொடாது, உடனே சென்று தந்தையாருக்குச் செய்தி தெரிவிக்குமாறு வற்புறுத்தினர். சந்தகன் கண்ணீர் வடித்தான். சித்தார்த்தர் ஆறுதல் மொழிந்து அவனை அனுப்பினர். சந்தகன் வேறு வழியின்றிக் கபிலவாஸ்துவை நோக்கி நடந்தான். அவன் கண்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்து அதை வழிநடத்திச் சென்ருன். சிறிது தூரம் சென்றதும் கண்டகம் தன் தலைவரது பிரிவுத் துயரைத் தாங்க மாட்டாததைப் போலத் தரையில் விழுந்து மடிந்தது. அதனல், சந்தகனது துயரம் மேலும் அதிகரித்தது. அவன்

புலம்பிக்கொண்டே கபிலவாஸ்துவை அடைந்தான்.

சோகச் செய்தி:

இளவரசர் இரவோடு இரவாக எங்கோ சென்றுவிட்டார் என்னும் செய்தி எங்கும் பரந்தது. நகரத்தில் பெருங்கொந்தளிப்பு எழுந்தது. மன்னர் செய்வதறியாது மயங்கினர். காவலாளிகள் நாற்றிசையும் கடுகித் தேடினர்கள். அப்பொழுது அழுதுகொண்டே வந்த சந்தகன், அரண்மனையை அடைந்தான். அவன் சித்தார்த்தரது ஆடை அணிகளையெல்லாம் அரசர் முன் வைத்து, நடுநடுங்கும் குரலில் நிகழ்ந்ததை உரைத்தான். சந்தகன் கதைபோலக் கூறிய சோகச் செய்தியைக் கேட்ட மன்னர், அடியற்ற மரம்போலப் படிமிசை வீழ்ந்தார். அவரது வீரமும் தீரமும் அச்சோகச் செய்தியின்முன் நிற்க மாட்டாது விடைபெற்றன. சுமந்திரர் உரைத்த சோகச் செய்தியின்முன் தசரதரது ஆவியே அகன்றதென்ருல், சுத்தோதன மன்னரது வீரமும் தீரமும் அகன்றது வியப்பாகுமா? மண்மிசை வீழ்ந்த மன்னர் குழந்தையைப்போலக் கதறி அழுதார். தேவி யசோதரை, தன் ஆருயிர் நாயகர் துறவுகொண்டார் என்பதை அறிந்து கல்லும் மரமும் இரங்குமாறு கரைந்தழுதாள். அன்னை பிரபாவதி விம்மி விம்மி விழுந்தழுதாள். அரண்மனை எங்கும் ஒரே அழுகை ஒலியாய் இருந்தது. அரண்மனை மட்டுமன்றி, கபிலவாஸ்துவிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் அழுகையொலி கேட்டது.

# 5. மாதவ முனிவரும் மகத மன்னனும்

## முதல் முயற்சி :

கோசல நாட்டுக் கோமகனுரான சித்தார்த்தர் துறவு பூண்டு, கௌதம முனிவர் என்னும் பெயர் தாங்கிப் பார்க்கவர் முதலிய முனிவர்களைக் கண்டு உரையாடினர் ; அவர்களோடு சேர்ந்து விதவித மான முறைகளில் தவமியற்றினர் ; அவற்ருல் பயன் விளையாமையால், 'மண்மகளறியா வண்ணச் சீறடி' வருந்த நடந்து, மகதநாட்டுப் பாண்டர மலையை அடைந்தார் ; அங்கு அருந்தவ முனிவர் பலர் இருந்தனர். அவர்களுள் அராளர்மர் என்பவர் முதன்மை பெற்றிருந்தார். கௌதம முனிவர் அவரை அணுகி, துக்க நீக்கத்திற்குரிய வழியை வினவினர். அவர் யோக நெறியை உரைத்தருளினர். கௌதம முனிவர், அந்நெறிநின்று உண்மை காண முயன்ருர் ; நெடுங்காலம் முயன்றும் பயன் விளையாது போகவே, அங்கிருந்தகன்ருர்.

## ஆட்டு மந்தை :

ஒரு நாள் நடுப்பகல் வேலையில் கதிரவன் கொடுங்கோலாட்சி நடத்திக்கொண்டிருந்தான்.

அவன் வெம்மைக்காற்ருது செடி கொடிகளும் வாடி வதங்கின. அந்த வெயில் வேளையில் கௌதம முனிவர் இராசகிருக நகரை நோக்கி நடந்துசென்ருர். வழியிடையில் ஆட்டு மந்தை ஒன்று, புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஓடியது. அதை ஆயர்கள் அவ்வளவு அவசரமாக ஓட்டிச் சென்ருர்கள். அந்த மந்தை பெரிய மந்தையாய் இருந்தது. ஆனல், மந்தையிலுள்ள ஆடுகள் பலநாள் பட்டினியால் மெலிந்திருந்தன; நடக்கவும் சீவனில்லாது தளர்ந்திருந்தன.

"மந்தை பெரியமந்தை—உணவின்றி
வாடி மெலியும்மந்தை
சிந்தை தளரும்மந்தை—நடக்கவும்
சீவனில் லாதமந்தை"

என்னும் கவிமணியின் கவிதையைப் படிக்கும்போது நம் உள்ளத்தில் அம்மந்தையைப்பற்றிய இரக்கவுணர்வு ஊற்றெடுப்பதோடு, சிந்தையும் தளர்கின்றதல்லவா?

கோவலர் கொடுமை:

ஆயர்களது அவசர உணர்வு ஆடுகளுக்குத் தெரியுமா? அவை பசியின் கொடுமையால், கண்ணிற்கண்ட புற்களைக் கடிக்கத் துடித்தன; தாக மிகுதியால் தண்ணீர் குடிக்க முயன்றன. அப்போதெல்லாம் ஆயர்கள் கூவியும் கல்லெறிந்

தும் அவற்றைத் துரத்தினார்கள். இவ்வாறு அவர்கள் ஆடுகளுக்கிழைத்த கொடுமையைக் கவிமணியவர்கள்,

“கண்ணிற் கண்டபுல்லை—நின்றொருவாய்
கௌவிட வொட்டாரையோ!
தண்ணீர் குடிப்பதற்கும்—விலகிடச்
சம்மதி யாரையோ!”

என்று கல்லும் கரைந்துருகுமாறு எடுத்துரைக்கின்றார். ‘கோவலர் வாழ்க்கைக்கு ஓர் கொடும்பாடில்லை என்பார்களே! அந்தக் கோவலர்களிடத்திலுமா கருணைக்கு இடமில்லாது போய்விட்டது?’ என்னும் குரல் நம் காதுகளில் ஒலிக்கின்றதல்லவா? ஆம்! அரச கட்டளை அவர்கள் உள்ளத்தில் எழுப்பிய அச்சத்தின் முன்பு அருளுக்கு இடமேது? ஆகையாலேதான், ஆயர்கள் அருளின்றி ஆடுகளைக் கொடுமைப்படுத்தினார்கள்.

*மாதவ முனிவர் :*

கௌதம முனிவர் ஆடுகள் படும் அல்லலைக் கண்டு உள்ளம் உருகினார். அவர், ‘தன்னுயிர் தான் பரிந்தோம்புமாறுபோல்—மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமின்!’ என்னும் அருளறத்தை அகிலமெங்கும் பரப்ப வந்தவரல்லவா? அவர் இரக்க உணர்வோடு ஆட்டு மந்தையைத் தொடர்ந்து நடந்தார். அந்த மந்தையிலிருந்த

ஆட்டுக் குட்டிகளுள் ஒன்று நொண்டி நொண்டி ஓடியது. அதன் காலிலிருந்து குருதி வடிந்த வண்ணமிருந்தது. தாய் ஆடு அன்பு மிகுதியால் அதைப் பார்த்துக்கொண்டும், ஆயர்களின் அடக்குமுறைக்குப் பயந்துகொண்டும் சென்றது. கௌதம முனிவர் முடம்பட்ட அந்த இளமறியின் அவல நிலைக்கு இரங்கினர்; அதைப் பரிவுடன் எடுத்துத் தம் தோளில் சுமந்துகொண்டு மந்தை யைத்தொடர்ந்து நடந்தார்.

"ஏழைப் பிராணிகள்—இடர்களைந்து
இன்ப மளிப்பதுபோல்,
வாழும் உலகிதனில்—செயுமொரு
மாதவம் வேறுமுண்டோ?"

என்பது கவிமணி அவர்கள் திருவாக்கன்றோ? முடமான இளமறியை முதுகிலேந்தி அதன் இடர் களைந்த கௌதம முனிவரை, மாதவமுனிவர் என் பதற்குத் தடையுமுளதோ?

*யாகசாலை அடைதல்:*

கௌதம முனிவர் ஆயர்களை நெருங்கி, 'இந்த வெயில் வேளையில் ஆடுகளை எங்குக் கொண்டு செல்கின்றீர்கள்?' என்று வினவினர். ஆயர்கள், 'எம்மையாளும் அரசர் நடத்தும் யாகத்தில் பலி கொடுக்கக் கொண்டு செல்கின்றோம்?' என்றார் கள். கொல்லா நோன்பு கொண்ட கௌதம முனி வர் கொலைத் தொழில் நடைபெறப் போவதைக்

கேட்டு வாளாவிருப்பரோ? தாம் கொல்லா நோன்பு கொண்டு வாழ்வதிலும், பிறரை அவ் வறம் ஓம்புமாறு செய்வதன்றோ சாலச் சிறந்தது? ஆகையால், கௌதம முனிவர், 'யாகம் காண யானும் வருகிறேன்,' என்று கூறி ஆயர்களைத் தொடர்ந்து சென்றார். அன்று மாலை வேளையில் ஆட்டு மந்தை இராசகிருக நகரை அடைந்தது. கௌதம முனிவரும் நகர வாயிலைக் குறுகினர். முனிவரின் முகப்பொலிவைக் கண்ட வாயிற்காவலர் வழி விலகி நின்றனர். கௌதம முனிவர் நகர வீதிவழி நடந்து சென்றார். ஆடு சுமந்து செல்லும் அண்ணலைக் கண்ட மக்கள் அவர் அழகில் சொக்கி நின்றார்கள். ஆட்டு மந்தை யாகசாலையை அடைந்தது. அண்ணலும் அவ்விடத்தை அடைந்தார்.

*மகத மன்னன் :*

அங்கு மகத மன்னனான பிம்பிசாரன் யாக சாலை நடுவில் நின்றுகொண்டிருந்தான்; பலர் மந்திரமோதி எரி வளர்த்தனர். வேள்வித் தீ, சுடர் விட்டுச் சுழன்றது. அப்போது ஒருவர் தீட்டிய வாளோடு அங்குத் தோன்றினர். கௌதமரின் உள்ளம் கசிந்துருகியது. அவர், 'இனி வாளாவிருப்பது முறையன்று,' என்று, மன்னனையும் மறையவரையும் மதியாது துணிந்து சென்று கொலைக்குரிய ஆடுகளை அவிழ்த்துவிட்டார்.

ஆடுகள் விடுதலை பெற்று ஓடின. மன்னரும் பிறரும் செய்வதறியாது திகைத்தனர்; மாதவ முனிவரது திருமுக ஒளியின் முன் நிற்கமாட்டாது மயங்கினர். அப்போது சாந்த மூர்த்தியான சாக்கிய முனிவர், கொல்லா நோன்பின் பெருமையை எல்லாரும் உணரப் பின் வருமாறு எடுத்துரைக்கலானர்:

“ வாழும் உயிரினை வாங்கிவிடல்—இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;
வீழும் உடலை எழுப்புதலோ— ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!
“ ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்!
ஆக்கிய யாகத்து அவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ கூறுமையா?
“ மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்,
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ? இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா!
“ காட்டுப் புலியின் கொடுமையஞ்சி உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலிஎனக் கொல்லுவதோ? அந்த
நான்மறை போற்றிய நீதிஐயா!”

## கொலை தவிர்த்தல்:

கௌதம முனிவரது உருக்கமான பேச்சு மன்னன் மனத்தை உருக்கியது. அவன் மனமாற்ற மடைந்தான். என்றாலும் பிறர் ஆத்திரமடைந்தனர். ‘அப்படியானல், அந்த ஆட்டிற்குப் பதி

லாக என்னை வெட்டிக் கொல்லுங்கள்' என்று முன்வந்தார் கௌதம முனிவர். மன்னர்க்கு மகனு ராய்ப் பிறந்த ஒருவர் அற்ப ஆட்டினைப் பெரிதென மதித்து அதனை வெட்டக்கூடாது என்று தடுத்த தோடு 'வெட்டுவதாயின் அதற்குப் பதிலாக என் னையே வெட்டுங்கள்,' என்று கூறி முன் வந்தது வியப்பன்றோ! உலக வரலாற்றில் இதற்கு இணை யான வரலாறுமுண்டோ? இதுபற்றியன்றோ கௌதம முனிவரைத் 'தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிரோம்பும், மன்னுயிர் முதல்வன்' என்று மணிமேகலை பாராட்டுகின்றது! கௌதம முனிவரது அருளுரை—தியாகச் செயல்—எல்லோர் உள்ளத்தையும் உருக்கியது. அவர்களும் மன்னனைப் போலவே மனமாற்றமடைந்தார்கள்.

---

# 6. கடுந்தவமும் கருத்து மாற்றமும்

## உருவேலா வன முனிவர்கள் :

கௌதம முனிவர் துக்க நீக்கத்திற்குரிய வழியை அறியச் செய்த முயற்சிகளெல்லாம் பய னற்றுப் போயின என்பதைக் கண்டோம். அவர் பின்னும் ஓய்ந்திராது உருத்திரகர் முதலிய முனிவர் பலரைக் கண்டு உபதேசம் பெற்ருர். அதனுலும் அவர் உள்ளத்தில் தெளிவு பிறக்க வில்லே. அப்பால் அவர் தாமாகவே தவமியற்றி உண்மை காணத் துணிந்தார். அதற்காக அவர் உருவேலா என்னும் வனத்தை அடைந்தார். அவ்வனம் வழியாக இக்காலத்தில் பல்குனி என வழங்கும் நைரஞ்சரை நதி ஓடிக்கொண்டிருந் தது. அது கங்கையின் துணே நதிகளுள் ஒன்று. அந்நதிக் கரையில் அமைந்திருந்த அழகிய சோலே யில் முனிவர் சிலர் தவம் செய்துகொண்டிருந் தனர். அவர்கள் பட்டினியாலும் பசியாலும் உடலே ஒடுக்குவதையே தவத்தின் குறிக்கோ ளாகக் கொண்டிருந்தார்கள். உடலே வாட்டினுல் உள்ளொளி பெருகும் என்பது அவர்கள் நம்பிக்கை. அந்நம்பிக்கையால் அவர்கள் சிறிது சிறிதாக உணவைக் குறைத்து உடலே வாட்டி

வந்தார்கள். அவர்களது இத்தவ முயற்சி மரண வாயிலுக்கு வழி நடத்துவதாகவே இருந்தது. கௌதம முனிவர் அவர்களைக் கண்டு அளவளாவி அவர்கள் தவ முறைகளைக் கண்டறிந்தார். அம் முறையில் தாமும் தவமியற்றத் தலைப்பட்டார்.

### கடுந்தவம் :

கௌதம முனிவர் அரண்மனை வாழ்வில் நாவின் சுவை உணர்விற்கு அடிமைப்பட்டுக் கிடந்தவரல்லவா? அவர் முதலில் நாக்கின் சுவை உணர்வை அடக்கியாளப் பழகினர்; பின்னர் உணவில் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு படிப்படியாக உணவைக் குறைத்து வந்தார். இரண்டு நாட்களுக்கு ஒரு வேளையும், ஏழு நாட்களுக்கு ஒரு வேளையுங்கூட அவர் உண்டு வரலானர். ஒரு மாதத்தில் இரண்டு வேளைமட்டும் அவர் உணவருந்தியதும் உண்டு என்பர். இவ்வாறு உணவைக் குறைத்து வந்தமையால், அவர் உடம்பு இளைத்து, எலும்பும் தோலுமாய் மெலிந்தது. கண்கள் உட்குழிந்தன. அவர் விகாரமாய்த் தோன்றினர். என்ருலும், அவர் உறுதி தளராது உடலை வாட்டி உள்ளக்கனலை எழுப்ப முயன்ருர். அவரது தவமுயற்சியைக் கண்டு வியந்த முனிவர் ஐவர், அவருக்குச் சீடராயினர். சாக்கிய முனிவர் அவர்களோடு சேர்ந்து பிராணுயாமம் என்னும் மூச்சை நிறுத்தும் முறையை மேற்கொண்டு கடந்தவம் புரியலானர்.

### காற்றில் வந்த கருத்து :

ஒரு நாள் கௌதம முனிவர் களைப்பு மிகுதியால் ஒரு மரத்தடியில் விழுந்துகிடந்தார். ஆயினும், அவர் உள்ளத்தில் எண்ண அலைகள் எழுந்தவண்ணமிருந்தன. 'அவர் உடலை வாட்டும் தவமுறையில் நிறை ஞானம் பெறமுடியுமா?' என்பதைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அப்போது அவ்வழியே திருமண ஊர்வலம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அவ்வூர்வலத்தில் பாடகன் ஒருவன் பாடிக்கொண்டுபோனான். அவனது பாட்டொலி காற்று வழிவந்து கௌதமர் காதில் விழுந்தது. முனிவர் அப்பாடற் கருத்தைக்கூர்ந்து கவனித்தார். "வீணையே, நீ அற்புதமான இன்னிசையை உண்டு பண்ணுகின்றாய். அதற்காக உன்னை நடுவு நிலையில் வைக்கவேண்டியுள்ளது. உனது நரம்புகளைத் தளர்த்திவிட்டால், உன்னிடம் ஓசை தோன்றுவதில்லை; அந்நரம்புகளை அதிகமாக முறுக்கிவிட்டால். அவை தெறித்துவிடும். எனவே, நரம்புகளைத் தளர்த்துதல், முறுக்குதல் என்னும் இருவித மிகைபாடுமின்றி நடுவு நிலையில் வைத்திருத்தலே இசைப் பயனைப் பெறுவதற்குரிய வழியாயுள்ளது," என்பது அப்பாடற் கருத்தாய் இருந்தது.

### கருத்து மாற்றம் :

அப்பாடற்கருத்து, கௌதம முனிவர் உள்ளத்தில் புதியதோர் உணர்ச்சியை உண்டுபண்

ணிற்று. அவர் மனித உடம்பு வீணைக்கு ஒப்பானது என்பதை உணர்ந்தார். 'ஆம்! வீணை நரம்புகளை நடுவு நிலையில் வைத்திருப்பதுபோல, உடம்பையும் நடுவு நிலையில் வைத்திருத்தல் வேண்டும். என் உடம்பை ஆதியில் அரசபோகத்தில் ஆழ்த்திக் கெடுத்தேன்; இப்போது பட்டினி போட்டு வதைத்தேன்; இரண்டு விதத்திலும் உடம்புக்கு இடுக்கண் இழைத்தேன்! ஐயோ! என்ன கொடுமை செய்தேன்! இனிமேலாவது இவ்வுடம்பை நடுவு நிலைமையில் வைத்துப் பேணுவேன். இதுவே உடம்பாலாய பயனைப் பெறுவதற்குரிய வழி,' என்று தெளிந்தார். உயிரின் விளக்கத்திற்கென இறைவனால் கொடுக்கப்பட்ட உடைமையன்றோ உடம்பு! அவ்வுடம்பை இழுக்கென்று எண்ணி அதைப் பட்டினி போட்டு வதைத்தால், மனத்தில் உயரிய எண்ணங்கள் தோன்றமுடியுமா? அறிவு விளக்கம் பெற முடியுமா? முடியாதன்றோ? எனவே, இவ்வுண்மையை உணர்ந்ததும் கௌதம முனிவர் பட்டினித் தவம் புரியும் கருத்தை மாற்றிக்கொண்டார்.

### ஆயர் குல மங்கை :

கருத்து மாற்றம் பெற்ற கௌதம முனிவர், மெல்ல எழுந்து சென்று அருகே நின்ற **அஜ பாலன்** என்னும் ஆலமரத்தடியில் அமர்ந்தார்.

பக்கத்து ஊர்களில் சென்று உணவுகொள்ள, பட்டினியால் மெலிந்திருந்த அவர் உடல்நிலை இடங்கொடுக்கவில்லை. ஆகையால், அவர் மீண்டும் சிந்தனை தேங்கிய முகத்தோடு தியானத்தில் அமர்ந்தார். அன்று வைகாசித் திங்கள் முழுநிலா நாள். அப்போது சுஜாதை என்னும் ஆயர்குல மங்கை அவ்வழியே வந்துகொண்டிருந்தாள். அவள் சேனனி என்னும் கிராமத்தலைவனை பலன் என்பவனுக்கு மகள். அவள் ஆல மரத்தடியில் அருள் ஒளி வீச அமர்ந்திருந்த முனிவரைக் கண்டாள்; அவர் உடல் பலநாள் பட்டினியால் வாடி மெலிந்திருப்பதைக் கண்டு, உள்ளம் உருகினள். 'ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்' ஆயர் குலத்தில் வந்தவள் அல்லவா அவள்? சுஜாதை உடனே தன் இல்லத்திற்கு விரைந்தாள்; பாற்சோறு சமைத்து அதைப் பொற்கிண்ணத்தில் ஏந்தி வந்தாள்; அதை ஆலமரத்தடி முனிவர் முன் வைத்து உண்டருளுமாறு அன்புடன் வேண்டினள். ஆயர்குல மங்கை அன்புடன் அளித்த உணவை முனிவர் அமுதமென அருந்தினர்; புத்துயிர் பெற்றார். அவர் உள்ளத்தில் ஓர் ஒளி தோன்றியது. அவர் தமக்கு உணவளித்த ஆயர்குல மங்கையின் அருள் உள்ளத்தை வியந்தார். அம்மங்கையின் அருஞ்செயல் அவர் உள்ளத்தில் உலகம் அருளின் அடிப்படையில் இயங்கினல் உய்வடையும் என்னும் உணர்வை எழுப்பியது. அவ்வுணர்வே அவரைப் புத்தராக்கியது

என்பர். கௌதம முனிவர் அருளின் பெருமையைத் தமக்கு உணர்த்திய ஆயர்குல மங்கையை

"அறிவிற் பெரிய ஆசிரி யர்க்கும்
அறிவு புகட்டும்நல் லறிவுடை யவள் நீ"

என்று பாராட்டி அனுப்பினர்.

*ஐவர் அகலல் :*

கௌதம முனிவர் பட்டினித் தவத்தைக் கண்டதும் அவர்தம் தொண்டரான முனிவர் ஐவரும் முனிவுற்றனர்; 'இவர் தவநெறியில் தவறினர்!' என்று வெறுத்துரைத்து வேற்றிடம் சென்றனர். சாதாரண மனிதரைப்போல உணவுண்ணும் ஒருவரால் பேருண்மைகளைக் கண்டு கொள்ளமுடியாது என்பது அவர்கள் எண்ணம். அவர்களது பிரிவைப்பற்றிச் சித்தார்த்த முனிவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. அவர் கருமமே கண்ணயிருந்து வந்தார்.

# 7. புதிய உண்மைகளும் புத்த பதவியும்

## திண்ணிய எண்ணம் :

கௌதம முனிவர் கடைசியாகக் கயை என்னும் இடத்தை அடைந்தார். அவ்விடம் இயற்கை எழில்மிக்க சோலையால் சூழப்பட்டு ஒளிர்ந்தது. அச்சோலையின் வனப்பு அவர் கண்ணையும் கருத்தையும் கவர்த்தது. அவர் அக்காவில் தங்கினர். அங்கு வானுறவோங்கி வளம்பெற வளர்ந்த அரச மரம் ஒன்று நின்றது. அம்மரம் இளங்கோவடிகளால், 'பணை ஐத்தோங்கிய பாசிலைப் போதி' என்று பாராட்டப்பட்ட பெருமையுடையது. அம்மரத்தின் கான்முளை ஒன்று இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குப் பிறகு, இன்றும் அங்கு அழியாது நிற்பதைக் காணலாம். அம்மரத்தடியில் அசோகரால் கட்டப்பட்ட ஆலயம் ஒன்று அழகுற விளங்குகின்றது. அம்மரம் கௌதம முனிவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. முனிவர் அம்மரத்தை நெருங்கினர். அவர் உள்ளத்தில் ஆறு ஆண்டுகளாக முயன்றும் காணமுடியாத உண்மைகளை அம்மரத்தடியில் கண்டறியலாம் என்னும் நம்பிக்கை பிறந்தது. ஆயர்குல மங்கை அளித்த உணவின் ஆற்றலால், அவர் அம்மரத்தடியில் அமர்ந்தார்; 'என் உடம்பே உலர்ந்தாலும்

சரி; உயிரே ஓடுங்கினாலும் சரி; முடிந்த உண்மைகளைத் தெரிந்துகொள்வதன் முன்பு இம்மரத்தடியைவிட்டு எழப்போவதில்லை!' என்னும் திண்ணிய எண்ணத்தோடு தியானத்தில் அமர்ந்தார்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெரின்"

என்னும் வள்ளுவர் வாக்குப் பொய்யாகுமோ?

*மாரனை வென்ற வீரர்:*

கௌதமர் தியானத்தில் அமர்ந்ததும் அவர் உள்ளத்தில் பெரிய போராட்டம் நிகழ்ந்தது. அப்போராட்டத்தை ஒரு கதையாக உருவகம் செய்து கூறுவர். தீய சக்திகளுக்குத் தலைவனாய் விளங்குபவன் மாரன் என்னும் தேவன். அவன் கௌதமரின் திண்ணிய எண்ணத்தைக் கண்டு கலங்கினான். சித்தார்த்தர் எண்ணியவாறு சித்திபெற்றுவிட்டால் அவனது தீய சக்திகளை உலகில் பரப்ப முடியாது போய்விடுமல்லவா? ஆகையால், அவன் கௌதம முனிவரது தவத்தைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தலைப்பட்டான். அவன் இதன் முன்பு பலமுறை கௌதமரோடு போர் தொடுத்துத் தோல்வி கண்டதுண்டு. முதலில் அவன் சித்தார்த்தர் துறவுகொள்வதைத் தடுக்க முயன்று தோல்வி கண்டான்; பின்பு, அவர் பட்டினித் தவத்தால் தளர்ந்து பார்மிசை விழுந்தபோது பாசத்தை ஊட்டிக் கெடுக்க முயன்றான்; அம் முயற்சியிலும் தோல்வியே கண்டான். இப்போது அவன் மீண்டும் ஒருமுறை முயன்று

பார்க்க எண்ணியே அவரை அணுகினன். அவன் காமம், வெகுளி, மயக்கம் என்னும் தன் புதல்வியர் மூவருடன் வந்து கௌதமர் தவத்தைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டான். முதலில் அவன் முயற்சிக்கு வெற்றி கிடைப்பதுபோலத் தோன்றியது. கௌதமர் மனம் தடுமாறினர்; மனைவி மக்களை எண்ணி மயங்கினர்; உற்றார் உறவினரை நினைத்து உருகினர்; கௌதமரது நிலையில் மாற்றங்கண்ட மாரன் மனம் மகிழ்ந்தான். ஆனல், கௌதமர் விரைவில் இவை மாரன் சூழ்ச்சியால் நிகழ்வன என்பதை உணர்ந்து, 'மாரா, பகலவன் முன்பு இருளுக்கு இடமேது? என் மனத்தகத்து உன் புன்மைக்கு இடமுண்டோ? வானம் பூமிவரை கடந்தாலும், என் உள்ளம் உறுதி தளராது என்பதை உணர்வாயாக. காற்று மேரு மலையைக் கவிழ்த்துவிடுமோ? உன்னலும் என் உறுதியைக் குலைத்துவிட முடியாது. போ! போ!' என்று கடிந்துரைத்தார். கௌதமரது திட உள்ளத்தைக் கண்ட மாரன், கலங்கினன்; தன் மகளிரோடு மறைந்தான். கௌதமர் மாரனை வென்ற வீரரானர்.

### ஞானத்தவம் :

கௌதமர் துன்பம் என்னும் மயக்கத்திலிருந்து உயிர்களை உய்விக்கும் வழிகளை நாடி அரசமரத்தடியில் அமர்ந்தார். அன்று முழு நிலா, பால்போன்ற கதிர்களை பரப்பிக்கொண்டிருந்தது. எங்கும் அரவம் அடங்கி அமைதி நிலவிற்று.

இந்த அமைதியான சூழலின் நடுவே கௌதமருக்கு ஞானத்தவம் கைகூடிற்று. அவர் மெய்யறிவு பெறலானார்; பற்றினால் வருவதே துன்பம் என்பதை உணர்ந்தார்; அதைத் தொடர்ந்து பற்று நீக்கத்திற்கான வழிகளை ஆராய்ந்தார். அவர் ஆறு ஆண்டுகளாக முயன்றும் கண்டறிய முடியாத உண்மைகள் எல்லாம் அன்று அவர் உள்ளத்தில் ஊற்று நீரைச் சுரந்துகொண்டிருந்தன.

TAMIL NADU ARCHIVES LIBRARY
112851

### புதிய உண்மைகள்

கௌதமர் கண்ட புதிய உண்மைகள் நான்கு. முதல் உண்மை துக்கம்: பிறப்பும் பிணியும் மூப்பும் முடிவும் துக்கம்; விரும்பியதை இழத்தலும், வெறுப்பதை அடைதலும் துக்கம்; பொதுவாக வாழ்வே துக்கம். இரண்டாவது உண்மை, துக்கத்தின் முளை: அவாவே துக்கத்தின் முளையாகும். அவாக் காரணமாகத் தீவினைகள் செய்வதும் தீவினைகளால் மீண்டும் பிறப்பு எடுப்பதும் நிகழ்கின்றன. எனவே, அவாவே துக்கத்தின் அடிப்படை என்பதாம். மூன்றாவது உண்மை, துக்க நீக்கம். அஃது அவாவை அகற்றிப் பொறிபுலச் சிறைகளிலிருந்து விடுதலை அடைதல் வேண்டும் என்பதாம். நான்காவது உண்மை, துக்கத்தை நீக்கும் வழிகள்: இதற்கு எண்வகை வழிகளைக் கௌதமர் வகுத்துரைத்தார். அவற்றை 'அஷ்டாங்க மார்க்கம்' என்பர்.

04:33
N59-5

**எண்வகை வழிகள் :**

கௌதமர் துக்கத்தைத் தொலைக்க எண்வகை வழிகளை வகுத்துரைத்தார் என்றேம் அல்லவா? அவற்றை மனிதன் முழுநிலை எய்துவதற்கான ஏணிப்படிகள் என்று கொள்ளுதல் பொருந்தும். அவற்றுள் முதற்படி, நற்காட்சி. உலகத்துப் பொருள்களின் உண்மைத் தன்மையை உணர்வதே நற்காட்சி எனப்படும். பார்வை தவறினல், செயல்களும் தவறிவிடுமல்லவா? ஆகையாலே தான் அவர் நற்காட்சியை முதற்படியாகக்கொண்டார்போலும்! இரண்டாவது படி, நல்லூற்றம். ஐம்புல இன்பங்களை அகற்றி, மனக்காழ்ப்பை மாற்றி, அறநெறியில் நிற்றலே நல்லூற்றமாம். மூன்ருவதுபடி, நேரிய பேச்சு. நான்காவது படி, நற்செய்கை : உயிர்க்கொலை நீக்கி, தீய உணர்ச்சிகளைப் போக்கிப் பண்புடன் வாழ்வதே நற்செய்கையாம். ஐந்தாவது படி, நேரிய வாழ்வு : ஒருவன் வாழ்வுக்குத் தேவையான வருவாயை நெறியறிந்து தேடி, எவ்வுயிர்க்கும் இடுக்கண் இழையாது வாழ்வதே நேரிய வாழ்வாம். ஆருவது படி, நன் முயற்சி : கருத்தோடு இருந்து தீய எண்ணங்களைக் கருவறுத்து, நல்லெண்ணங்களைப் பேணி வளர்த்தலே நன்முயற்சியாம். ஏழாவது படி, நற்கடைப்பிடி : இது அறநெறி தவருது உறுதியோடு நிற்றலைக் குறிக்கும். எட்டாவது படி, நல்லமைதி : அலைந்து திரியும் மனத்தை அடக்கி

ஒரு நிலைப்படுத்தலே நல்லமைதியாம். இதுவே தியானம், சமாதி, யோகம் என்றெல்லாம் கூறப் படுவது.

**புத்த பதவி :**

ஞான யோகத்தமர்ந்த கௌதம முனிவர் அன்று இரவு பொழுது விடியும்முன்பே புதிய உண்மைகளையெல்லாம் கண்டறிந்தார். அப்போது அவர் உள்ளம் அலையற்ற கடல்போல அமைதி அடைந்தது. அவர் போதி அடைந்து புத்தரானார். புத்தர் என்பதற்கு நிறைஞானியார் என்பது பொருள். கௌதமர் புத்தரானதும் அவர் திருமுகத்தில் பூரண ஞானம் பொலிந்து விளங்கியது. அவர் மேனியிலிருந்து அருள் ஒளி வீசியது. அவர் பெற்ற இந்த ஞான அனுபவத் திற்குப் 'போதி சத்துவம்' என்பது பெயர். அவர் போதம் பெற்ற அரச மரமும் 'போதிமரம்' என்னும் பெயர் பெற்றது. கௌதமரும் 'போதித் தலைவர்' என்று போற்றப்பட்டார்.

## 8. அறவாழி உருட்டலும் சங்கம் நிறுவலும்

### கடமையுணர்ச்சி :

புத்தர் தாம் கண்டறிந்த உண்மைகளை உலக மக்களுக்கு உணர்த்த எண்ணினர். அவர் உள்ளத்தில் உறுதி பிறக்கவில்லை. ஆசை இருளில் அகப்பட்டு, அறியாமைக் குட்டையில் ஆழ்ந்து கிடக்கும் உலகம் தம் அறிவுரையை ஏற்குமா என்னும் ஐயமே அவர் உள்ளத்தில் உறுதி பிறவாமைக்கு ஏதுவாயிற்று. இந்நிலையில் அவர் தம் இருக்கையைவிட்டு எழுந்திராது ஏழு வாரங்களைக் கழித்தார். இறுதியில், அவர் தாம் கண்டறிந்த உண்மைகளை உலகிற்கு உணர்த்தி உலகை நன்னெறியில் உய்ப்பது தம்கடமை என்பதை உணர்ந்தார். அக்கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு அவர் போதி மரத்தடியைவிட்டு எழுந்தார்.


### அறவாழி உருட்டல் :

புத்தர் தாம் கண்டறிந்த உண்மைகளை முதலில் யாருக்கு உபதேசிப்பது என்று சிந்தித்தார். முன்பு தம்மைவிட்டுப் பிரிந்த முனிவர்களது நினைவு அவருக்கு வந்தது. அவர் அம்முனிவர் ஐவரும் காசியில இருப்பதை அறிந்து, காசிச் செலவை மேற்கொண்டார்; வடதிசை நோக்கி வழி நடந்தார். வழியிடையே உபகண் என்னும் அந்தணன் எதிர்ப்பட்டான். புத்தர் அவனிடம்

தாம் கண்டறிந்த உண்மைகளை எடுத்துரைத்தார். அவன் அவர் கொள்கைகளை விரும்பி ஏற்று மகிழ்ந்தான். ஆகையால், புத்தர் மேலும் ஊக்கம்கொண்டவராய் நெடுவழி நடந்து காசியை அடைந்தார்; காசியில் சாரநாத்து என்னும் இடத்திலுள்ள மான் சோலையில் முனிவர் ஐவரும் இருப்பதை அறிந்து, புத்தர் அங்குச் சென்றார். அவர்கள் முதலில் புத்தரை வெறுத்தபோதிலும், பின்பு, அவர் பெருமையை உணர்ந்து வரவேற்றார்கள். புத்தர் அவர்களது பக்குவ நிலைக்கு ஏற்றவாறு தாம் கண்டறிந்த உண்மைகளை உபதேசித்தார். ஐவரும் அவர் உபதேசத்தை ஏற்று, அவருக்குத் தொண்டராயினர். புத்தர் செய்த இந்த உபதேசத்தை 'அறவாழி உருட்டல்' என்று பௌத்த நூல்கள் பகரும். புத்தர் முதலில் அறவாழி உருட்டிய இந்திய மான்சோலை, இன்று உலகோர் உள்ளங்களைக் கவரும் பேறு பெற்று விளங்குகின்றது. இன்று அங்குப் பெரிய கோபுரத்துடன்கூடிய விகாரும், சீனர் நிறுவிய அழகிய கோவிலும் காட்சி தருவதைக் காணலாம்.

*சிந்தனை விருந்து :*

புத்தர் தம்மை நாடி வந்தவர்கட்கெல்லாம் அறவுரை பகர்ந்தார். அவர் மனிதனை நல்ல மனிதனாக மாற்றியமைக்கும் நோக்கத்தோடு எண்வகைப் படிகளில் நின்று வாழுமாறு வேண்டினார். ஒரு துளி தண்ணீர் உலர்ந்துவிடாமலிருக்க அதைக் கடலில் சேர்த்துவிடுதல் வேண்டுமல்லவா?



விகாரையும் கோவிலும்

அதைப்போலவே ஒவ்வொருவரும் தன்னலத்தை விடுத்து மன்பதையோடு ஒன்றிவிடுதல்வேண்டும் என்று அறிவுறுத்தினர்; இந்நெறி நின்று ஒழுகினல் தீமையிலிருந்து விலகி மெய்யறிவு பெற்று நிர்வாண முத்தியை அடையலாம் என்று உபதேசித்தார். மேலும், அவர் உபதேசம் அறிவியலுக்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. அவர், 'நான் சொல்லுகிறேன் என்பதற்காக எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். 'ஏன்? எப்படி?' என்று சிந்தித்துப் பார்த்து ஏற்றுக்கொள்ளுங்கள்,' என்று கூறியே தமது உபதேசத்தைத் தொடங்குவது வழக்கம். ஒருவன் எவ்விதச் சிந்தனைக் கட்டுப்பாடுமின்றி, காய்தல் உவத்தல் அகற்றி, தெளிந்த சிந்தையோடு உண்மையை உணர்ந்து, நன்மையைமட்டும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது அவர் கருத்து. அவர் தமது உபதேசத்தை இவ்வாறு எடைபோட்டு ஏற்குமாறு வேண்டியது அறிஞர் சிந்தனைக்கு நல்விருந்தாய் அமைந்தது. இன்னும் அவர் பிறமத நிந்தனையைக் கடிந்துரைத்தது பலரையும் கவர்ந்தது. புத்தர், 'பிற மதங்களைப் பழித்துரைப்பது, அண்ணாந்து நின்றுகொண்டு வானத்தில் துப்புவதற்கு ஒப்பாகும்,' என்று உரைத்தார். வானத்தை நோக்கித் துப்பிய எச்சில் வானத்தைக் களங்கப்படுத்துவதுண்டா? அது கீழ்நோக்கிவந்து துப்பியவனுடைய உடம்பையன்றே அசுத்தப்படுத்தும்! அதுபோலவே, பிற மதங்களைப் பழித்துரைத்தவன் தானே அவமானமடைவான் என்பது அவர் கருத்து. இத்தகைய உயர்ந்த பண்

புடைய புத்தரது உபதேசம் சிந்தனையாளர்கட்கு நல்விருந்தாய் அமைந்தது வியப்பாமோ?

## பௌத்த சங்கம் :

புத்தர் கண்டறிந்த புது நெறி புத்த மதம் எனப்பட்டது. புத்தர் தம் மதத்தை எங்கும் பரப்புவதற்குச் சங்கம் தேவை என்பதை உணர்ந்தார். சங்கம் தொடங்கப்பட்டது. இச்சங்கம் புத்த சமயத்தின் ஆணிவேராய் அமைந்தது. முதலில் இச்சங்கத்தில் முதல் உபதேசம் பெற்ற முனிவர் ஐவரே அங்கம் பெற்றனர். பின்னர், புத்தர் பெருமை எங்கும் பரவவே, பலர் அவரை நாடி வந்தனர். வந்தவர்களைப் புத்தரது வாரிசம் போன்ற வதனமும், வசீகரப் பார்வையும், புன் முறுவலும் கவர்ந்தன. புத்தரும் வந்தவர்கட்கெல்லாம் உபதேசித்தார். அவர் இன்னர் இனியார் என்று பாராது எல்லார்க்கும் உபதேசித்தார். இவ்வாறு உபதேசித்த புத்தரை,

> " இன்னர்க்கு மினியனு யிரந்தார்க்கு மின்றீம்பால்
> குன்ருமற் பொழிந்திட்ட குன்ருய குணத்தினன் "

என்று நீலகேசி என்னும் நூல் பாராட்டுகின்றது. புத்தரிடம் உபதேசம் பெற்றவர்களுள் பலர் துறவு கொண்டு சங்கத்தில் அங்கம் பெற்றனர். சங்கம் வளர்ந்தது.

*சால்பு :*

நல்லவர்க்கும் எதிர்ப்பு இல்லாது போகுமா? புத்தரது பெருமை எங்கும் பரவுவதைக் கண்டு பொருமை கொண்ட பலர், அவருக்கு எதிராய் எழுந்தனர். அவர்கள் ஆங்காங்கு எதிர்ப்பை வளர்த்து வந்தார்கள். புத்தர் அவர்கள் மீதும் வெறுப்புக்கொள்ளாது விருப்புடன் நடந்து வந்தார். அவர் உள்ளத்தில், நட்பு, பகை என்னும் உணர்ச்சிக்கே இடமில்லாதிருந்தது. அவரது அன்பு உயர்திணை, அஃறிணை என்னும் வேறு பாட்டையும் கடந்து சென்றது. அவர் வாடிய பயிரைக் கண்டும் வாட்டங்கொண்டார். இத் தகைய அன்புள்ளம் படைத்தவர் பகைவர்களை ஒறுக்கத் துணிவரோ? அவர் தம்மை வைதவர் களையும் அன்பினுல் ஆட்கொள்ள முயன்ருர். ஆனுல் புத்தரது அருமை மாணவர்கள் சில வேளை களில் சீறி எழுவதுண்டு. அப்போதெல்லாம் புத்தர், 'அருமை மாணவர்களே, பிறர் நம்மை தூற்றுவதற்காக, நீங்கள் சினமோ, வெறுப்போ கொள்ளலாகாது. சினமும் வெறுப்பும் கொள்ளு வது உங்கட்கே தீங்கு விளைவிக்கும்,' என்று அறி வுறுத்தி அவர்களை அமைதி கொள்ளச் செய்வார். இஃதன்ருே சால்பு!

> " இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
> என்ன பயத்ததோ சால்பு! "

என்பது வள்ளுவர் வாக்கு.

# 9. புனிதச் செலவும் புத்தமத உபதேசமும்

## அரவடக்கி அறமுரைத்தல்:

புத்தர் அகிலமெங்கும் அறவாழியை உருட்ட நினைத்துப் புறப்பட்டார். அவர் மான் சோலையை நீங்கி உருவேலா வனத்தை அடைந்தார். அங்குத் தவ முனிவர் பலர் இருந்தனர். அவர்களுள் அக்கினி, காசியபர் என்பவர் முக்கியமானவர். அவருக்கு ஐந்நூறு சீடர்கள் இருந்தார்கள். அவர்கள் சடை முடி தரித்து அக்கினி வழிபாடு செய்து வந்தார்கள். வேள்வி செய்தலும் அவர்கள் வழக்கமாய் இருந்தது. புத்தர் அவர்களை அடுத்துத் தமது அறநெறியை உபதேசிக்க முயன்றார். அவர்கள் முதலில் அந்நெறியை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். புத்தர் பல நாள்கள் காசியபரோடு தங்கியிருந்தார். அப்போது அவர் தமது ஆற்றலால் காசியபரிடமிருந்த நச்சரவொன்றை அடக்கினர். 'அருள்வழி நிற்போருக்குக் கொடிய பாம்பு முதலியவையும் அடங்கும்,' என்பது பொய்யாகுமா? அருள் வள்ளலான புத்தருக்குக் கொடிய பாம்பு அடங்கியதைக் கண்ட காசியபர், அவரது பெருமையை உள்ளவாறு உணர்ந்தார். ஆகையால், காசியபரும் அவர்தம் சீடர் ஐந்நூற்றுவரும் புத்தரிடம் அறங்கேட்டுப் புனிதம் பெற்றனர். அவர்கள் சடை முடியை அகற்றி, வேள்வியை விடுத்துப் பௌத்தராயினர்.

அவர்களைத் தொடர்ந்து நதி காசியபர், கயா காசியபர் என்னும் இருவரும் தம் சீடர்களோடு பௌத்தம் தழுவினர்.

## வேணு வனம்:

புத்தர் உருவேலா வனத்தில் சில காலம் இருந்த பின்னர், அக்கினி, காசியபர் முதலியவர்களோடு இராசகிருக நகரை நோக்கிச் சென்றார். அது பிம்பிசார மன்னன் ஆட்சி நடத்தும் நகரம். புத்தர் வேள்வியைத் தடுத்து உயிர்க்கொலை தவிர்த்தது அந்நகரத்தில் அல்லவா? அன்று அவர் பிம்பிசாரனுக்கு வாக்களித்திருந்தபடியே இன்று அவன் நகரை நோக்கி நடந்தார். பிம்பிசார்ரன் புகழ் மிக்க காசியபர் புத்தருக்குத் தொண்டரானதை அறிந்து, முன்னையிலும் புத்தரை நன்கு மதித்து வரவேற்றான். புத்தர் மன்னனுக்கும் மற்றவர்களுக்கும் புது நெறியை உபதேசித்தார். அனைவரும் புத்த மதத்தின் பெருமையை உணர்ந்து போற்றினர். பலர் அவருக்கு அடியவராயினர். மன்னன் தனக்குரிய வேணு வனத்தைப் பௌத்த சங்கத்திற்குத் தானமாக வழங்கினான்; அங்கு முனிவர்கள் தங்குவதற்கு ஒரு விகாரையும் கட்டுவித்தான். புத்தர் அங்கு அமர்ந்து வருபவர்கட்கெல்லாம் அறநெறியை அருளினர். மக்கள் பெருந்திரளாய் வந்து அண்ணலின், அறவுரையைக் கேட்டு அகமகிழ்ந்தார்கள்.

புத்தர் வேணு வனத்தில் இருக்கும்போது தான், சாரீபுத்திரன், மௌத்கல்யாயனன் என்ப

வர்கள் வந்து, அவரிடம் அறவுரைகள் கேட்டார்கள். புத்தர் அவர்களுக்கு அறநெறியை அருளி, அவ்விருவரையும் தம் மாணவர்களாக ஏற்றுச் சங்கத்தில் முதன்மை அளித்தார். அநாதபிண்டன் என்னும் பெருநிதிக் கிழவன் ஒருவன் அவருக்கு அடியவனானதும் அங்கிருக்கும்போது தான். இவ்வாறு பலரும் புத்தருக்கு அடியவரானதைக் கண்ட பிம்பிசாரன், 'துறவியின் வாழ்வே உலகில் உயர்ந்த வாழ்வு; அது வேந்தன் வாழ்விலும் விழுமிய வாழ்வு,' என்பதை உணர்ந்தான்.

*கபிலைச் செலவு :*

சுத்தோதன மன்னர் தம் அருந்தவப் புதல்வரைப் பிரிந்த நாள் முதலாகப் பெருந்துயரில் ஆழ்ந்து கிடந்தார். மன்னரைப் போலவே நகர மக்களும் வருந்தினார்கள். மன்னர் சித்தார்த்தரை அழைத்து வருவதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போயின. ஆண்டுகள் பல சென்றன. சித்தார்த்தர் நிறை ஞானியாராய்—புத்தராய்—இராசகிருக நகரில் இருக்கிறார் என்னும் செய்தி அரசருக்கு எட்டியது. அவர் மனம் மகிழ்ந்தார். அவரை அழைத்து வரத் தூதுவர் பலரை அடுத்தடுத்து அனுப்பிக்கொண்டிருந்தார். சென்ற தூதுவர் எல்லாரும் புத்தரது அருள் ஒளியில் மூழ்கி, அறவுரையில் ஆழ்ந்து, அவரோடு இருந்து வரலாயினர். இவ்வாறு அரசர் பலமுறை தூதுவரை அனுப்பியும் அவர் அனைவரும் சென்ற காரியத்தை மறந்து புத்தரோடு இருந்துவிட்டனர்.

சுத்தோதன மன்னர் மனம் தளர்ந்தார். ஆயினும், அவர் இறுதி முயற்சியாக உதாயி என்பவனை அனுப்பினர். உதாயி, சித்தார்த்தர் பிறந்த நாளில் பிறந்தவன்; இளமையில் அவரோடு கூடி விளையாடியவன். அவன் புத்தரிடம் தூது சென்றான். புத்தரது அருள் ஒளி அவனையும் விட்டுவிடவில்லை. அவனும் அவரிடம் அறவுரை கேட்டுத் துறவு பூண்டான். என்றாலும், அவன் மற்றவர்களைப்போல வந்த காரியத்தை மறந்துவிடவில்லை. வாய்ப்பு நேர்ந்தபோது தந்தையாரின் விருப்பத்தைத் தெரிவித்து அதை நிறைவேற்ற வேண்டுவது தனயரின் கடமை என்று அறிவித்தான். புத்தர் தம் தந்தையாரது விருப்பத்தை நிறைவேற்ற உளங்கொண்டார். அவர் மாணவர் புடைசூழக் கபிலை நகர்ச் செலவை மேற்கொண்டார்.

புத்தர் ஒரு நாளைக்கு ஒரு யோசனை வீதம் நடந்து சென்றார்; வழியிடை வந்து கூடியவர்களுக்கெல்லாம் அறிவுரை பகர்ந்தார். ஆங்காங்கே மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று அவர் அருளுரையைச் செவி மடுத்தார்கள். சென்ற விடமெல்லாம் அவர் சிறப்புப் பெற்றார்.

### *பிரிந்தவர் கூடல்:*

புத்தர் ஆயிரம் துறவியர் நடுவில் ஆண் சிங்கம்போன்று வந்துகொண்டிருந்தார். அவர் வழுக்கைத் தலையுடன் காவியாடை அணிந்து. திருவோடு தாங்கி, நகரவாயிலை நண்ணினர். அவரது

திருவுருவைக் கண்ட மன்னர் திடுக்கிட்டார்; மனம் வருந்தினர். ஆயினும், புத்தரது திருமுகத்தில் வீசிய தெய்வ ஒளி மன்னரது மனத்தைக் கவர்ந்தது. அவர் விரைந்துசென்று தம் புதல்வரை ஆரத் தழுவி அகம் மகிழ்ந்தார்; ஏதோ பேச முயன்றார். பேச்சு எழவில்லை. பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ!

### *அரசர்க்கு அறவுரை:*

சுத்தோதன மன்னர் தம் புதல்வரைத் தக்கவாறு உபசரிக்கத் திட்டமிட்டிருந்தார். புத்தர் அரச விருந்தினராய் இருக்க மறுத்துவிட்டார். அவர் வழக்கம்போல வீடுவீடாய்ச் சென்று பிச்சை ஏற்றார். அவர் பிச்சை ஏற்பதைக் கண்டவர், 'அரசர்க்கு இக்கதி நேர்ந்ததே!' என்று கண்ணீர் வடித்தனர். புத்தரது இரந்துண்ணும் செயலை அறிந்த மன்னர் வருந்தினர். அவர் புத்தரைக் கண்டு, 'அரச குலத்தில் வந்த நீ ஐயம் ஏற்பது அழகாகுமா?' என்று கடிந்துரைத்தார். புத்தர், 'இரந்து உண்பதே எங்கள் இயல்பு,' என்று புன்முறுவலோடு விடை இறுத்தார். அன்றியும், அவர் தம் தந்தையர்க்குத் தனியாக அறவுரையும் அருளினர். ஒருவன் புதையல் எடுத்தால் அதைத் தன் தந்தையாரிடம் சேர்த்துவிடுதல் முறையல்லவா? அதைப்போலவே புத்தரும் தாம் கண்டறிந்த புதிய உண்மைகளைத் தம் தந்தையாருக்கு அறிவுறுத்தினர். புத்தரது அறிவுரையால் சுத்தோதன மன்னர் மனம் தெளிந்தார்;

துறவின்மாண்பை உணர்ந்தார். அவர் அரண்மனை வாழ்க்கையில் தேவைக்கதிகமான பொருள்களை நுகர்ந்துவந்த தம் புதல்வர் தேவைகளைக் குறைத்துக்கொண்டதைக் கண்டு அதிசயித்தார்.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதொப்பது இல்."

என்பது வள்ளுவர் வாக்கன்றோ?

*யசோதரை :*

கௌதமர் காடேகிய காலம் முதலாக யசோதரை கவலையால் மெலிந்து தவவாழ்வு வாழ்ந்து வந்தாள். அவள் தன் கூந்தலைக் கத்தரித்து, இயற்கை எழிலைச் சிதைத்து, நாள்தோறும் ஒரு வேளையே உண்டு, ஏழு ஆண்டுகளைக் கழித்தாள். அதன்பிறகே அவளுக்குத் தன் கணவரை வணங்கும் பேறு வாய்த்தது. புத்தர் கபிலை நகர் வந்திருந்தபோது அரச குலத்தினர் அனைவரும் அவர் இருந்த இடத்தை அடைந்து, அறவுரை கேட்டனர். புத்தருடைய சிற்றன்னையாகிய கௌதமியும் அவ்வாறே செய்தாள். ஆனால், தேவி யசோதரை மட்டும் புத்தரை வணங்கவில்லை. அவள், 'என் நாதருக்கு என் நல்லொழுக்கத்தில் நம்பிக்கை இருந்தால், அவரே என்னை நாடிவந்து ஆட்கொள்வார்,' என்று கூறி வாளாவிருந்தாள். அவளது கருத்தறிந்த புத்தர் தம் மாணவர்கள் புடைசூழ அந்தப்புரம் சென்றார். தவத்தின்



சிகரம் தன்முன் வருவதைக் கண்ட யசோதரை, அவர் திருவடியிற் பணிந்து எழுந்தாள். அண்ணல் அவளுக்கு ஆசி மொழிந்து, அறவுரை வழங்கினுர். யசோதரை அண்ணல் உரைவழி அற வாழ்வை மேற்கொண்டாள்.

இராகுலன் :

புத்தர் அரண்மனையைவிட்டு வெளியேறித் தெருவழிச் சென்றுகொண்டிருந்தார். அப்போது யசோதரை தன் ஏழுவயதுச் சிறுவன் இராகுலனை அழைத்து, 'மகனே, உன் தந்தையரிடம் சென்று உனக்குரிய தந்தைவழிச் செல்வத்தைப் பெற்று வா,' என்று கூறினுள். 'யார் அம்மா என் தந்தையார்?' என்ருன் இராகுலன். 'நீ உன் தந்தையாரை அறிந்துகொள்ளவில்லையா? அதோ பார்! துறவியர்களுக்கிடையில் மதியம்போன்று செல்லும் பெம்மானே உன் தந்தையார்,' என்று சுட்டிக்காட்டினுள் யசோதரை. இராகுலன் அகம் மகிழ்ந்து தந்தையாரை அணுகி, 'அப்பா, எனக்குரிய தந்தை வழிச் செல்வத்தைத் தந்து செல்லுங்கள்,' என்று வேண்டினுன். புத்தர் பதில் மொழியாது புன்முறுவல் காட்டினுர். புதல்வன் விடாது கேட்டுக்கொண்டே தொடர்ந்தான். அவர் அழிவற்ற அறச் செல்வத்திற்கு அவனை வாரிசாக்க எண்ணினுர்; தம் அருகேவந்த மாணவர்களைப் பார்த்து, 'போதி மரத்தடியில் நான் பெற்ற செல்வத்தை இவனுக்கு வழங்குங்கள்,' என்ருர். உடனே மாணவருள் ஒருவர் காவித்துணி ஒன்றை எடுத்து அவன் கழுத்தில் கட்டினுர். இளமைப்

பருவத்தில் அவனுக்குத் துறவு வழங்கப்பட்டது. இராகுலன் துறவு பூண்டு பௌத்த சங்கத்தில் சேர்ந்தான். நிகழ்ந்ததை அறிந்து யசோதரை மனமழிந்து வருந்தினாள்.

### நந்தன் :

கௌதமிக்கு ஒரு மகன் உண்டு. அவன் பெயர் நந்தன் என்பது. சித்தார்த்தர் துறவு கொண்டபிறகு அவனே கௌதம குலக்கொழுந் தாகக் கருதப்பட்டான். புத்தர் கபிலை நகர் வந்திருந்தபோது அவனுக்குத் திருமணம் நிகழ விருந்தது. அவன் திருமணக்கோலம் புனைந்து மணமண்டபத்தில் வீற்றிருந்தான். புத்தர் திடீ ரென்று அவன்முன் தோன்றினார். நந்தன் எழுந்து வணங்கினான். வணங்கியவன் கையில் திருவோட்டைக் கொடுத்தார் புத்தர். அவன் அதைப் பணிவுடன் பெற்றான். திருவோட்டைத் திரும்பப் பெற்றுக்கொள்ளாமலே திரும்பினார் புத்தர். நந்தன் மணக்கோலத்தோடு திருவோடு தாங்கி அவரைத் தொடர்ந்தான். 'நீ என்னோடு வருகிறாயா?' என்றார் புத்தர். 'வருகிறேன்,' என்றான் நந்தன். அவனும் துறவுபூண்டு பௌத்த சங்கத்தில் சேர்ந்தான்.

### சுத்தோதனரது துக்கம் :

கௌதமக் குலக்கொழுந்துகளான இருவர் துறவு பூண்டதை அறிந்த சுத்தோதனர் துக்கம்

மிகக் கொண்டார். ஆயினும், அவர் துக்கத்தை அடக்கிக்கொண்டு, தமது நிலே பிறருக்கும் நேராது இருக்கவேண்டுமே என்னும் எண்ணத் தால் புத்தரைக் கண்டு, 'இனிமேலாவது அறியாப் பாலர்களேப் பெற்ருேர் இசைவின்றிச் சங்கத்தில் சேர்க்கலாகாது' என்று வேண்டினர். அண்ண லும் அதற்கு இணங்கினர். ஆனல், பெற்ருேர் இசைவைப் பெற்றுச் சங்கத்தில் அங்கம் பெற்ற இளேஞர் எண்ணுயிரவர் என்று நூல்கள் இசைக்கும்.

## சுத்தோதனரது மறைவு:

புத்தர் கபிலவாஸ்துவில் சில நாட்கள் இருந்துவிட்டு வேணு வனத்திற்குப் புறப்பட்டார். அவர் சிராவஸ்தி என்னும் நகரை அடைந்தார். அங்கு அநாதபிண்டகன் அவரை வரவேற்ருன். அவன் சங்கத்திற்கு உவந்தளித்த ஜேதவனத்தில் புத்தர் தங்கினர். அங்கு வந்து அறவுரை கேட்டுப் பௌத்தரானேர் பலர். அந்நகரத்து அரசனும் அறங்கேட்டுப் பற்று நீங்கினன். பின்பு புத்தர் வைசாலி நகரை அடைந்தார். இந்நகர் அக்காலத் தில் 'பூவுலக சுவர்க்கம்' என்று புகழப்பட்டது. இந்நகரை அடுத்து மகாவனம் என்னும் சோலே இருந்தது. அச்சோலேயிலுள்ள கூடாகாரம் என் னும் மடத்தில் புத்தர் தங்கினர். அங்கு மக்கள் பெருந்திரளாய் வந்து கூடினர்கள். வந்தவர்களுக் கெல்லாம் அவர் அறவுரை பகர்ந்தார். இங்கிருக் கும்போது சுத்தோதன மன்னர் நோய்வாய்ப்

பட்டதாகச் செய்தி வந்தது. புத்தர் கபிலை நகருக்கு விரைந்தார். சுத்தோதனர் தமது தொண்ணூற்றேழாவது வயதில் காலமானர். புத்தர் உடனிருந்து தந்தையாருக்கு ஆற்ற வேண்டிய ஈமக் கடன்களை ஆற்றினர். அப்பால் மீண்டும் மகாவனத்தை அடைந்து சில காலம் தங்கினர். கௌதமி யசோதரை முதலிய மங்கையர் அங்கு வந்து பௌத்த சங்கத்தில் சேர்ந்தனர். அது முதற்கொண்டு மங்கையரும் சங்கத்தில் அங்கம் பெறும் வழக்கம் தொடங்கியது.

*புத்தமத உபதேசம் :*

புத்தர் மழை காலமாகிய மூன்று மாதங்கள் மட்டுமே மடங்களில் தங்குவார்; மற்றக் காலங் களில் எப்போதும் புத்தமத உபதேசத்திற்காகப் புனிதச் செலவை மேற்கொண்டேயிருப்பார். அவர் தனித்தாவது மாணவர்களுடனுவது சென்று எல்லாருக்கும் புத்தமதத்தை உபதேசித்து வந்தார். திருடர், களியர், கள்ளர் முதலியவர்கட் கும் புத்தமதத்தை உபதேசித்து அவர்களையும் திருத்தினர். இவ்வாறு அவர் சென்ற இடந் தோறும் புத்தமதத்தை உபதேசித்து அனைவரை யும் அன்பினுல் ஆட்கொண்டார். புத்தமதம் எங் கும் பரவியது. அவர் காசியில் உருட்டிய அற வாழி காசினி எங்கும் உருண்டது.

# 10. சிறு நிகழ்ச்சியும் சீரிய கருத்தும்

## கௌதமி :

புத்தர் உலக மக்களை உய்விக்கும் பொருட்டுப் புனிதச் செலவை மேற்கொண்டிருந்தாரல்லவா ? ஒருநாள் அவர் புதிய ஊர் ஒன்றை அடைந்தார். அவ்வூரில் கௌதமி என்னும் மங்கை நல்லாள் ஒருத்தி வாழ்ந்திருந்தாள். அவள் கைம்பெண். அவளுக்கு ஒரே குழந்தை உண்டு. அவள் அக் குழந்தையிடம் அளவற்ற அன்பு கொண்டிருந் தாள். குழந்தையின் சிரித்த முகம் அவள் கவலையை ஓட்டியது; மழலை மொழி அவளுக்கு மகிழ்ச்சி ஊட்டியது. அவள் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தாள், குழந்தை வளர்மதியென வளர்ந்து வந்தது.

## மகவிழந்து அலைதல் :

அந்தக் குழந்தையின்மீது கண் வைத்தான் கருணையற்ற கூற்றுவன். அவன் கௌதமிக்கு ஒரே குழந்தை என்று கருதினனில்லை; குறித்த காலத்தில் அதன் உயிரைக் கொண்டு சென்றான். குழந்தையை இழந்த கௌதமியின் சோகத்தை என்னென்றுரைப்பது! அவள் ஆறாகக் கண்ணீர் வடித்து அழுது புலம்பினாள். உற்றார் உறவினரை இழந்த அவளுக்கு ஆறுதல் கூறுவார் யார்? அவள் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்

துக்கொண்டு, 'இறந்த குழந்தையை எழுப்பித் தருவார் யாரேனும் உளரோ?' என்று கேட்டுக் கொண்டே வீடு வீடாகச் சென்ருள். மகவிழந்த மங்கையைக் கண்டோர் அவள் நிலைக்கு இரங்கினர். சிலர் அவளை அடுத்து, 'இறந்த குழந்தையைப் பிழைப்பிக்கும் மருந்து இவ்வுலகில் இல்லையே!' என்று இரக்கவுணர்வோடு கூறினர். ஆயினும், கௌதமி அவர்கள் உரையில் நம்பிக்கை கொள்ளாது, மேலும் குழந்தைக்கு உயிர் கொடுப்போரைத் தேடி அலைந்துகொண்டேயிருந்தாள்.

*புத்தரை அடைதல் :*

அப்போது அவ்வழியே வந்துகொண்டிருந்த பௌத்த பிக்கு ஒருவர் அவளைக் கண்டார். அவர் மகவிழந்த மங்கையின் நிலைக்கு இரங்கினர்; அவள் மன நிலையை நன்கு உணர்ந்தார். அவர் மனக்கனிவோடு கௌதமியை அடுத்து, 'காரிகையே, நீ கேட்கும் மருந்தை உடையவர் இவ்வுலகில் ஒருவரே உளர்,' என்ருர். அதைக் கேட்ட கௌதமி, 'ஐயா, அவர் யார்? அவர் எங்கிருக்கிருர்?' என்று ஆத்திரத்தோடு வினவினுள். அதற்கு அவர், 'உலகம் புகழும் புத்தரே நீ கேட்கும் மருந்தை உடையவர்; அவர் இன்று இங்கு வந்திருக்கிருர்,' என்று விடை இறுத்தார். அவ்வளவுதான்! கௌதமி குழந்தையை எடுத்துக் கொண்டு, வழி வினவி, புத்தர் வீற்றிருந்த ஆராமத்தை அடைந்தாள்; அங்குப் புத்தரைக் கண்டு, அவர் திருவடிகளைப் போற்றி நின்ருள்.

### நாவுரிக் கடுகு :

புத்தர் சந்திரமதி போலத் தம் முன் நின்ற தையலை நோக்கி, 'தாயே, உனக்கு உற்ற துன்பம் யாது?' என்று வினவினர். அதற்குக் கௌதமி, 'ஐயா, எனது ஒரே குழந்தை இறந்துவிட்டது. நீங்கள் மனம் வைத்தால் இறந்த என் மகவை எழுப்பித்தரலாம்,' என்று நைந்து நொந்துருகி உள்ளம் நயனவழியே ஓட மைந்தனைக் காட்டிக் கூறினள். அப்போது புத்தர், 'அப்படியா அம்மா! உன் ஆண் மகவு இறந்துவிட்டதா? அதை எழுப்பித் தரவேண்டும். அவ்வளவு தானே?' என்றார். புத்தரது பேச்சில் அமைதி இருந்தது. அதைக்கேட்ட கௌதமி ஆறுதல் அடைந்தாள். அவள், 'அதற்காக எந்தப் பச்சிலை மூலிகை வேண்டுமாயினும் கொண்டுவரு வேன் ஐயா,' என்றாள். புத்தர், 'பச்சிலை மூலிகை ஒன்றும் வேண்டா. கொஞ்சம் கடுகுமாத்திரம் வேண்டும்,' என்றார். 'எவ்வளவு கடுகுவேண் டும்?' என்றாள் கௌதமி. அதற்குப் போதித் தலைவர்,

" நாவிய கடுகுவேண்டும்—அதுவுமோர்<br>
நாவுரி தானும்வேண்டும் ;<br>
சாவினை அறியாத—வீட்டினில்<br>
தந்ததா யிருக்கவேண்டும் "

என்று விடையிறுத்தார்.

### கௌதமியின் ஏமாற்றம் :

போதித் தலைவர் புகன்றதன் புதை பொருளைப் புரிந்துகொள்ளாத கௌதமி, அவ்வாறே கடுகு

கொண்டுவருவதாகக் கூறி, நகர வீதியில் நுழைந்தாள். அவள் அங்கு ஒரு வீட்டு வாயில்முன் நின்று, 'தாயே, நாவுரிக் கடுகு தந்து உதவு' என்று தாழ்ந்துவேண்டினுள். முதியவள் ஒருத்தி முன் வந்து அவள் வேண்டியவாறே, நாவிக்கொழித்த நாவுரிக் கடுகைக் கொண்டுவந்தாள். அப்போது கௌதமி, 'பாட்டி, இந்த வீட்டில் இதற்குமுன்பு யாரேனும் இறந்ததுண்டோ?' என்று வினவினுள். முதியவள் கண்ணீர் உகுத்தாள்; தன் வீட்டில் இறந்தவர்களை எல்லாம் அடுக்கடுக்காய்க் கூறினுள். அதைக்கேட்ட கௌதமி, 'அப்படியானல், இவ்வீட்டுக் கடுகு எனக்கு வேண்டா,' என்றுகூறி, அதை வாங்காமலே வேருெரு வீட்டை அடைந்தாள். அங்கும் ஒரு பெண் கௌதமி கேட்டவாறு நாவிய கடுகோடு வந்தாள். அவளைக் கௌதமி, 'உங்கள் வீட்டில் யாரேனும் இறந்ததுண்டா?' என்று வினவினுள். அவ்வினு அப்பெண்ணின் உள்ளத்தைச் சுட்டுவிட்டது. அவள் ஆருத்துயரத்தோடு தன் ஒரே புதல்வன் இறந்த சோகக் கதையை எடுத்துரைத்தாள். கௌதமி அங்கும் கடுகைப் பெருது மற்றொரு வீட்டை நாடினுள். அங்கும் இவ்வாறே நிகழ்ந்தது. ஆயினும், அவள் சிறிதும் சலிப்பின்றிப் பின்னும் பல வீடுகளில் ஏறியிறங்கினுள். எந்த வீட்டில் சென்றாலும் அங்கெல்லாம் சாவு நிகழ்ந்திருப்பதாகவே ஊரார் கூறினர். அவள் சாவினை அறியாத தனி மனை ஒன்றுகூட இல்லை என்று உணர்ந்து, ஏமாற்றத்தோடு திரும்பினுள்.

*சீரிய கருத்து :*

கௌதமி திரும்பிவந்து புத்தரைக் கண்டாள். அவள் மரணத்தை அறியாத மனை ஒன்றுகூட இல்லை என்று உரைத்தாள். அப்போது புத்தர் 'மரணம் என்பது எல்லார்க்கும் பொதுவாக அமைந்திருக்கும்போது நீ மட்டும் அது நிகழா திருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியா யமா?' என்று வினவினர். புத்தர் எழுப்பிய வினு அவள் மன நோய்க்கு நல்ல மருந்தாய் அமைந் தது. அவள் நல்லறிவு பெற்றுள்; உலகில் உடம்பெடுத்த உயிர்கள் அனைத்திற்கும் என்றே னும் ஒருநாள் வரும்முடிவே தன் மைந்தனுக்கு வந்திருப்பதாக உணர்ந்தாள். உடனே, அவள் கானம் சென்று மகவினை அடக்கம் செய்துவிட்டு வந்து, புத்தரது திருவடியைப் பணிந்துபோற்றி னுள். அருள் வள்ளல் அவளுக்கு அறவுரை பகர்ந் தார். கௌதமி அவர் உரையை ஏற்றுத் துறவு கொண்டு பௌத்த பிக்குணியானுள். 'இறப்ப தற்குச் சித்தமாய் இருப்பவனே நல்வாழ்வு வாழ்வ தற்குத் தகுதியுடையவன்,' என்பது புத்தரது சீரிய கருத்தாகும்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் வருவரோ? மாநிலத்தீர்! வேண்டா;
'நமக்கும் அதுவழியே; நாம்போம் அளவும்
எமக்குளன்?' என் றிட்டுண் டிரும்"

—ஔவையார்

# 11. அரும்பணி ஆற்றலும் பெருநெறி அடைதலும்

## அரும்பணி ஆற்றல் :

'என் கடன் பணிசெய்து கிடப்பதே,' என்பது அப்பர் திருவாக்கு. புத்தர் பெருமானர் அப்பொன் மொழிக்கு ஏற்பத் தம் வாழ்க்கையைப் பொதுப்பணி புரிவதற்கே அர்ப்பணித்தார். அவர் தம் வாழ்நாளெல்லாம் மக்களை நல்வழிப் படுத்துவதிலேயே நாட்டங்கொண்டு கண்ணுங் கருத்துமாய் இருந்து கடனாற்றினர்; சொல்லாலே மட்டுமன்றிச் செயலாலும் பணியாற்றினர். அவர் சங்கம் நிறுவிப் பணிபுரிந்த செயல் பாராட்டத் தக்க செயலாயிற்று. அதைச் செயற்கரிய செயல் என்று கூறினும் தவருகாது. புத்தர் பல இடங்களில் மடங்களை நிறுவி, அங்கெல்லாம் பௌத்த பிக்குகள் அமர்ந்து பணிபுரிய வழி வகுத்தார்; அவர்கள் எவ்வித வேற்றுமையுமின்றி ஒற்றுமையுடன் பணிபுரியுமாறு அறிவுறுத்தினர். கடலிற் கலக்கும் ஆறுகள் முந்திய பெயர்களையும் இயல்புகளையும் இழந்து ஒன்றுபடுதல்போல, பௌத்த சங்கத்தில் சேருபவர்களும் பெயர்களையும் இயல்புகளையும் இழந்து ஒன்றுபடுதல்வேண்டும் என்பது புத்தரது கருத்து. அவர் தமது இறுதிமூச்சுவரையில் எவ்வுயிரையும் தம் உயிர்போலக் கருதி அவை வாழ்வு பெறும்வகையில் அரும்பணி பல ஆற்றி வந்தார்.

### தொழுநோயாளனுக்குத் தொண்டு :

அசிரவதி நதிக்கரையில் சிராவஸ்தி என்னும் நகர் அமைந்திருந்தது. அந்நகரை அடுத்த ஜேத வனத்தில் இருந்த பௌத்த மடம் பிரசித்திபெற்றது. அம்மடத்தில் பிக்குகள் பலர் இருந்தனர். அவர்களுள் திஸ்ஸன் என்பவன் ஒருவன். அவன் அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழு நோயாளனாய் இருந்தான். அவனைக் கண்ட பிக்குகள் அவனுக்குத் தொண்டாற்ற மறுத்தார்கள்; அவன் அருகே செல்லவும் அஞ்சினார்கள். ஆகையால், அருளறம் பூண்ட அண்ணலாரான புத்தரே அவனுக்கான பணிவிடைகளைச் செய்து வரலானார். 'அறிவினான் ஆகுவது உண்டோ, பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றாக் கடை?' என்ற திருவள்ளுவரின் அருமைக் கருத்து அவர்க்கு உரிய கருத்தாய் அமைந்தது. அவர் நோயாளியை நாள்தோறும் நீராட்டி மருந்திட்டுப் போற்றினார். அதனால், நோயாளி ஆறுதலடைந்தான்; நாளடைவில் நோய் நீங்கி நலம் பெற்றான். இவ்வாறு புத்தர் ஆற்றிய ஆற்றல்மிக்க தொண்டுகள் அளவிறந்தன.

### போரைத் தடுத்தல் :

ஒரு சமயம் சாக்கியர்களுக்கும் கோலியர்களுக்கும் போர் மூளும் நிலை வந்தது. உரோகிணியாற்றில் நீர் வற்றியிருந்த காலத்தில் அவ்வாற்று நீரைத் தாங்களே ஏகபோக உரிமையோடு அனுபவிக்கவேண்டும் என்றார்கள் சாக்கியர்கள். அந் நீர் முழுவதும் தங்களுக்கே உரிமையாகவேண்டும்

என்றார்கள் கோலியர்கள். பகை வளர, இருதிறத்தினரும் போருக்கு எழுந்தனர். உரோகிணி ஆற்றில் உதிரவெள்ளம் புரண்டோடும் நிலைமை ஏற்படும்போல இருந்தது. புத்தர் நிலைமையை அறிந்தார்; அவர்கள் அறியாமைக்கு இரங்கினர். அவர் அந்நிலையில் வாளா இருப்பரோ? அருள் வள்ளலாரான அவர் விரைந்து சென்றார்; இரு திறத்தாரையும் நெருங்கி ஆற்று நீருக்காக மனித இரத்தம் சிந்தத் துணிந்த அறியாமையை எடுத்துக் காட்டினர்; ஆற்று நீரிலும் மனித இரத்தம் மலிவான பொருளா என்று அவர்களை வினவினர். புத்தரது பொன்னுரை அவர்கள் உள்ளங்களைத் தொட்டு உருக்கியது. இரு திறத்தினரும் நல்லறிவு பெற்று அகன்றனர். போரைத் தடுத்த புத்தரது அரிய சேவையை அனைவரும் போற்றினர். இவ்வாறு புத்தர் அரிய தொண்டுகள் ஆற்றி மனித குலம் உய்ய உழைத்து வந்தார்.

> "உண்டால் அம்ம இவ் வுலகம்
> தமக்கென முயலா நோன்றாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மையானே,"

என்று சங்ககாலச் சான்றோர் ஒருவர் அருளியவாறு மன்னுயிர்க்கு அன்பு செய்த புத்தரைப் போன்ற மாண்புடையாராலேயே மண்ணுலகு நிலைத்திருக்கின்றது.

> "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அஃதின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்,"

என்னும் வள்ளுவர் வாக்கும் இங்குக் கருதத் தக்கது.

**மாணவர் :**

புத்தர் தமது பணியைத் தொடர்ந்து நடத்து வதற்கு உடனிருந்து உதவியவர்கள் அவருடைய மாணவர்கள் என்ருேமல்லவா? அவருக்கு மாண வராயினர் பல்லாயிரவர். அவர்களுள் *சாரீபுத்திரர், மொகலன், சந்தன், உபாலி, ஆனந்தன், நாகசமாலர், உபவாணர், சுனக்கதர், சாகதர்* என்பவர்கள் முக்கியமானவர்கள், ஆனந்தன் புத்தருக்கு அணுக்கத் தொண்டனய் இருந்து கடைசிவரை கடனுற்றினன். புத்தர் மாணவர் களது ஒழுக்க நெறியைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்துவந்தார். அவர் அன்று மாணவர் கடமைகளாக வகுத்துரைத்தவை, இன்றைய மாணவர்கட்கும் உகந்தனவாய் உள் ளன. 'மாணவன் கொல்லா நோன்பை மேற் கொண்டு, அனைத்துயிர்மீதும் அருள் சுரக்கும் பண்பினனய் இருத்தல் வேண்டும்; அறவோ னய்ச் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனய் வாழ்தல் வேண்டும்; பொய் பேசவோ, புறங் கூறவோ கூடாது; கடுஞ்சொல்லும் பயனிலவாகிய சொல்லும் பகரலாகாது; இனியன பேசி இன் முகத்தோடு விளங்குதல் வேண்டும்; மயக்கம் தரும் பானங்களைப் பருகலாகாது,' என்றெல்லாம் புத்தர் மாணவர்கட்கு உரிய கடமைகளை வகுத் துரைத்தார். மேலும் அவர், ஆசிரியர்முன் பணிந்து நிற்றலும் அவர் ஆணையை அன்புடன் ஏற்றலும், அவர் விரும்பியதை அளித்தலும்,

அவர் சொற்கடவாது நடத்தலும் மாணவர்கட்குரிய கடமைகளாகும் என்றும் அருளியுள்ளார்.

ஐய வினு :

புத்தர் எப்பொழுதும் மாணவர்கட்கு அறவுரை பகர்ந்துகொண்டே இருப்பார். அவர்களும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் தங்கள் ஐயங்களை வினவித் தெரிந்து வந்தார்கள். ஒரு சமயம் மாணவர்கள் அண்ணலை நோக்கி, 'பெருமானே, அரும் பெருங்கருத்துக்களை எல்லாம் எங்களுக்கு அருளிய நீங்கள், கடவுளைப்பற்றி ஒரு வார்த்தை கூட அருளவில்லையே! அதற்குக் காரணம் யாதோ?' என்னும் ஐயவினவை எழுப்பினர்கள். அதற்கு அண்ணல் மாணவர்களை நோக்கி, 'இச் சோலை மரங்களில் இருக்கும் இலைகள் அதிகமா, அவற்றிலிருந்து உதிர்ந்து கிடக்கும் சருகுகள் அதிகமா?' என்று ஒரு மாற்று வினவை விடுத்தார். அவர்கள், 'மரங்களில் இருக்கும் இலைகளே அதிகம்,' என்று இயம்பினர்கள். அப்போது புத்தர், 'அருமை மாணவர்களே, அதுபோலவே நம் வாயினின்று வெளிவந்தன சில; வெளிவாராதன பல. அவற்றைப்பற்றிப் பேசுவது அவசியமன்று. நல்வாழ்விற்குத் தேவையான சிலவற்றைப் பற்றி மட்டும் பேசுவது போதுமானது. அவற்றின்படி நடப்பதே நல்லது,' என்று அறிவுறுத்தினர். மாணவர்களும் அறிவு பெற்று அவர் உரைவழி நடந்து வந்தார்கள்.

*பகைவர் :*

அருள் நெறி நின்ற புத்தருக்கும் பகைவர்கள் இல்லாமற் போகவில்லை. 'உலகில் மிக நல்லவர் களாக இருப்பதும் ஆபத்து,' என்பது அறிஞர் பெர்னுட்ஷா வாக்கு. மிக நல்லவரான காந்தியடி களுக்கும் பகைவன் தோன்றினன். அறநெறி நின்ற மெய்ப்பொருள் நாயனருக்கு முத்தநாதன் உயிர் உண்ணும் கூற்றம் போலத் தோன்றினன். அருளறம் பூண்ட அண்ணலாரான புத்தருக்குத் தேவதத்தன் என்பவன் பெரும் பகைவனய்த் தோன்றினன். அவன் இளமையிலேயே புத்தரிடம் பொருமை கொண்டிருந்தான் அல்லவா? பொருமையில் தோன்றிய பகைமை பல காலமாக அவன் உள்ளத்தில் பதுங்கி வாழ்ந்திருந்தது. இப்போது புத்தருக்குப் பேரும் புகழும் பரவுவதை யும், பௌத்த சங்கத்தை மக்கள் மதித்துப் போற்று வதையும் கண்டு அவன் மனம் புழுங்கினன். அவன் புத்தரை அழித்துவிட்டுப் பௌத்த சங்கத் தலைவனக எண்ணினன்; அதற்கான சதி வேலை களில் இறங்கினன். அவன் பிம்பிசார மன்னன் அரியணையில் அமர்ந்திருப்பதுவரை புத்தரை அழித்துவிட முடியாது என்பதைக் கண்டான். ஆகையால், அவன் பிம்பிசாரன் மகனை அஜாத சத்துருவைத் தன் பக்கத்தில் இழுத்தான். இரு வரும் கூடிச் சதித்திட்டம் தயாரித்தனர். தேவ தத்தன் கௌதமரைக் கொன்று புத்த பீடத்தில் அமர்வதற்கும், அஜாதசத்துரு தந்தையைக் கொன்று அரச பீடத்தில் அமர்வதற்குமான

திட்டம் உருவாயிற்று. புத்தர் எவ்வித எதிர்ப்பிற்கும் அசையாத மலை போன்ற மாண்புடையவர் அல்லவா? அவர் எதிர்ப்பைக் கண்டு அஞ்சவில்லை; மிகுதியால் மிக்கவை செய்யத் துணிந்த பகைவர்களையும் தம் தகுதியால் வென்றுவிட எண்ணினர்; அவ்வாறே அன்புநெறி நின்று அறிவுரை பகர்ந்து அவர்கள் மனத்தை மாற்றினர். பகைவர்கள் பகை நீங்கி மன்னிப்பு வேண்டினர்கள். புத்தர் அவர்களை மன்னித்தார். அன்பு நெறியே வென்றது.

### சந்தகன் செய்த விருந்து :

புத்தருக்கு வயது எண்பது. அவர் எண்பதாண்டளவும் இடைவிடாது தொண்டாற்றி வந்தார். அவர் எண்ணிய யாவும் செய்து முடிக்கப்பட்டன. அப்போது அவர் தாம் நிர்வாணம் என்னும் விடுதலை பெறுவதற்குரிய காலம் வந்துற்றதாக உணர்ந்தார்; காசிக்கு வடகிழக்கில் நூற்றிருபது கல் தொலைவிலுள்ள குசி நகரத்தை நிர்வாணமடைவதற்குரிய நகரமாகத் தேர்ந்தெடுத்தார்; அந்நகரை நோக்கி நடந்தார்; வழியிடையில் வரவர நகரில் தங்கினர்; அங்கு 'யாவும் நிலையற்றன,' என்னும் பொருளமைந்த அரிய உரை ஒன்று நிகழ்த்தினர். அவர் உரையைச் செவி மடுத்து நல்லறிவு பெற்றார் பல்லாயிரவர். அவ்வூரில் சந்தகன் என்னும் தட்டான் ஒருவன் இருந்தான். அவன் புத்தருக்கும் அவர் மாணவர்கட்கும் விருந்து செய்தான். புத்தர் அவ்விருந்

தில் உண்ட உணவே அவருக்கு இறுதி உண வாய் இருந்தது. ஆயினும், புத்தர் சந்தகன் அளித்த உணவை சுஜாதை அளித்த உணவோடு ஒப்பிட்டுப் பாராட்டினர். சுஜாதை அளித்த உணவு ஞானமடைவதற்குக் காரணமாய் இருந் ததுபோல, சந்தகன் அளித்த உணவு நிருவாண மடைவதற்குக் காரணமாயிற்று என்பது அவர் கருத்து.

சுபத்திரர் :

பின்பு புத்தர் அந்நகரை நீங்கி இடையிடையே இளைப்பாறி, குசி நகரை அடைந்தார். அங்கு இரணியவதி நதிக்கரையில் ஒரு சோலையில் இரட் டைச் சால மரங்களுக்கு இடையே ஆனந்தன் விரித்த பாயில் அமர்ந்து படுத்தார். படுத்தவர், 'நான் இன்று நடுநிசியில் நிருவாணமடைவேன்,' என்று கூறினர். சூழ்ந்து நின்றவர் அழுது புலம் பினர். அப்போது சுபத்திரர் என்னும் அந்தணர் ஒருவர் ஓடோடி வந்தார். ஆனந்தன், 'இவர் புத்தரோடு வாதம் செய்ய வருகிறார்; இது ஏற்ற காலமன்று,' என்று கருதி அவரை அண்ணலின் அருகே வரவொட்டாது தடுத்து நிறுத்தினன். புத்தர் அதை அறிந்து சுபத்திரரை அருகழைத்து அவருக்கு அறிவுரை பகர்ந்தார். சுபத்திரர் மன மாசகற்றி, பௌத்த சங்கத்தில் அடைக்கலம் புகுந்தார்.

*ஆனந்தனுக்கு அறவுரை :*

சுபத்திரருக்கு உபதேசித்த புத்தர் தளர்ச்சியால் தரையில் சாய்ந்தார். அப்போது, அணுக்கத் தொண்டனுன ஆனந்தன் கதறிக் கண்ணீர் வடித்தான். அதைக் கண்ணுற்ற அண்ணல் ஆனந்தனைப் பார்த்து, 'ஆனந்தா, நீ ஏன் அழுகிருய்? உலகில் தோன்றியுள்ள ஒவ்வொரு பொருளும் அழிவுறும் என்பது நீ அறியாததா? அன்புக்குரிய எல்லாப் பொருள்களையும் இறுதியில் பிரிந்துதான் ஆகவேண்டும் என்று நான் அடிக்கடி அறிவுறுத்தி வந்திருப்பதை நீ மறந்துவிட்டாயா? நமது அறநெறி உலகில் நிலைத்திருக்க வேண்டுமேயன்றி ஊனுடல் அழியாது நிலைத்திருக்க வேண்டுவதில்லை. புத்தநிலை என்பது ஒரு மனிதனன்று; அது மனிதனல் அடையப்பெறும் ஞான நிலை என்பதை அறிவாயாக. முறையாக முயன்ருல் யாரும் புத்தனுகலாம். நீயும் புத்தனுகலாம். விரைவில் நீ புத்தனுவாய்,' என்று அறவுரை புகன்ருர். ஆனந்தன் அவர் உரையால் ஒருவாறு ஆறுதலடைந்தான்.

*பெருநெறி அடைதல் :*

கி. மு. 483-ஆம் ஆண்டில் அன்று வைகாசித் திங்கள் செவ்வாய்க்கிழமை; பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய நாள். அன்று இரவு நடுநிசி

வந்துற்றது. எங்கும் ஓசைகள் அடங்க அமைதி ஓங்கி நின்றது. புத்தர் இறுதியாகக் கண் விழித்துப் பார்த்தார்; தம்மைச் சூழ மாணவர் பலர் வணக்கம் பாடி நிற்றலைக் கண்டார். அவர் அவர்களை நோக்கி, 'அன்பர்களே, உரு எடுத்தவையெல்லாம் உரு அழியும் என்பதை மறந்துவிடாதீர்கள்; பிறப்புக்குக் காரணம் எதுவோ, அதுவே இறப்புக்கும் காரணம் என்பதை உணருங்கள்; அருளொடு முயன்று நன்னெறி நின்று விடுதலை பெறுங்கள்,' என்று அருளினர். இவையே அவர் இறுதி மொழிகளாக வெளிவந்தவை. அப்பால் அவர் தியானத்தில் அமர்ந்து உலகப் பற்றுக்களைப் படிப்படியாக அகற்றி, நிருவாணம் என்னும் பிறவாப் பெருநெறி எய்தினர். அப்போது அங்கு நின்ற மாணவர்களும் மற்றவர்களும் மனங்கலங்கி,

"மருளறுத்த பெரும்போதி மாதவரைக்
கண்டிலமால் என்செய் கேம்யாம்!
அருளிருந்த திருமொழியால் அறவழக்கங்
கேட்டிலமால் என்செய் கேம்யாம்!
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக்
கண்டிலமால் என்செய் கேம்யாம்!

என்று அழுது புலம்பினர்கள்.

## செந்தழற்படுத்தது :

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகச் செந்தண்மை பூண்ட அந்தணராக வாழ்ந்த புத்தர் பரிநிருவாணமடைந்த செய்தி எங்கும் பரந்தது. குசி

நகரத்து மாந்தர்கள் அறிந்தார்கள். அவர்கள் பெருந்திரளாக விரைந்து வந்து அண்ணலார் திருவுடலைச் சூழ்ந்தார்கள்; பூமாலை சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களால் அவ்வுடலை அழகு செய்தார்கள்; அவர் புகழைப் பாடினார்கள்; இன்னிசைக் கருவிகளை இயக்கினார்கள். இவ்வாறு ஏழு நாட்கள் நிகழ்ந்தன. ஏழாவது நாள் அண்ணலார் திருவுடல் செந்தழற்படுத்தற்கு எடுத்துச் செல்லப்பட்டது. மள்ளர் தலைவர் எண்மர் திருவுடலைத் தம் தோள்மிசைத் தாங்கிச் சென்றனர். மாணவர்களும் மற்றவர்களுமாகப் பல்லாயிரவர் சூழ்ந்து சென்றனர். அவர்கள் எரியூட்டற்கு என்று ஏற்படுத்தியிருந்த மகுடபந்தனம் என்னும் இடத்தை அடைந்தார்கள். அப்போது பாவாபுரியிலிருந்த காசிப மகாதேரர் பிக்குகளுடன் அங்கு வந்து சேர்ந்தார். அவர் அண்ணலார் திருமேனியை வலம் வந்து வணங்கினார். மற்றவர்களும் இறுதி வணக்கம் செலுத்தினார்கள். மள்ளர் தலைவர் ஒருவர் முன் வந்து அண்ணலார் திருவுடற்குச் செந்தழல் மூட்டினார். நெருப்புக் கொழுந்துவிட்டு எரிந்தது. அண்ணலார் ஊனுடலைச் செந்தழல் உண்டது. எஞ்சிய ஏற்புடம்பு பல்வேறு இடங்களுக்குப் பங்கிட்டுக்கொண்டு செல்லப்பட்டது. அங்கெல்லாம் அவற்றின் மீது சேதியங்கள் கட்டினார்கள். அண்ணலார் புகழ் அவனி எங்கும் பரந்தது.

---

# 12. பௌத்தம் பாரெங்கும் பரவியது

*வாழ்ந்த காலத்தில்:*

கௌதம புத்தர் தாம் கண்டறிந்த தத்துவங்களைப் புதிய ஒரு மதமாக உருவாக்கினார். அம் மதம் பௌத்தம் என்னும் பெயரால் வழங்கியது. கௌதம புத்தர் அம்மதத்தை மாநிலம் எங்கும் பரப்பி மன்பதையை உய்விக்கக் கருதினார் அல்லவா? உலக வரலாற்றில் பலர் தம் மதத்தை வாளின் வலிமையாலும் வன்முறைச் செயலாலும் பரப்பி உள்ளனர். மத அடிப்படையில் நிகழ்ந்த போர்களே இதற்குச் சான்று பகரும். கௌதமர் வாளின் வலிமையை நாடாது, வன்முறைச் செயலை விரும்பாது, அன்பு நெறி நின்று, பௌத்தத்தைப் பரப்பி வந்தார். அவர் வாக்கும் வாழ்வும் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. புத்தர் மாணவர்களும் அவர் வழி நின்று தொண்டாற்றினார்கள். அவர்களும் வாயால் மட்டும் விளங்காது, செயலாலும் சீர்பெற நடந்தார்கள். மக்களுக்குப் பௌத்தத்தில் நம்பிக்கை பிறந்தது. அவர்கள் கௌதம புத்தரது பெருமையையும் அவர் அருள் நெறியையும் தூய்மையையும் உள்ளவாறு உணர்ந்து, அதுவே தங்களை உய்விக்கும் நெறி என நம்பினார்கள். பௌத்தம் அவர்கள் உள்ளங்களில் இடம் பெற்றது. இவ்வாறு கௌதமர் வாழ்ந்த காலத்தில் பௌத்தம் பாரதம் எங்கும் பரவியது.

*மறைவுக்குப் பின் :*

கௌதம புத்தர் மறைந்த பின்பு, பௌத்தத்தின் வளர்ச்சிக்குப் பல இடையூறுகள் நேர்ந்தன. பௌத்த பிக்குகளிடையே இருந்த ஒற்றுமை உணர்ச்சி அழிந்து சிதைய ஆரம்பித்தது. அவர்கள் கருத்து வேற்றுமை கொண்டு கலகம் விளைத்தார்கள். புத்தரது தத்துவங்களுக்குப் புதுப்புது விளக்கங்கள் தோன்றின. இந்நிலையில் பௌத்தத்தின் மீது பற்றுள்ளங்கொண்ட பலர் மாநாடு ஒன்றைக் கூட்டுவித்தனர். அம்மாநாடு இராசகிருகம் என்னும் நகரில் நடைபெற்றது. புத்தருடன் நெருங்கிப் பழகிய பிக்குகள் அம்மாநாட்டில் பங்கு கொண்டார்கள். அவர்களது முயற்சியால் பௌத்த சங்கங்கள் ஒன்றுபட்டு இயங்கின. பிக்குகள் கடமை உணர்ச்சியோடு பௌத்த நெறியை நாடெங்கும் பரப்ப முனைந்தார்கள். ஆயினும், நாளடைவில் அவர்களிடையே கருத்துவேற்றுமை வளர்ந்து வந்தது. அவர்கள் பின்னும் கலகம் விளைக்கும் நிலை வந்துற்றது. இந்தக் குழப்பமான நிலையை நீக்குவதற்காக மற்றொரு மாநாடு கூட்டப்பட்டது. பௌத்தத்தின்மீது ஆழ்ந்த பற்றுடைய பலர் இந்த மாநாட்டை வைசாலி என்னும் நகரில் கூட்டினர். மாநாட்டில் பௌத்த பிக்குகளை ஒன்றுபடுத்துவது அரிதாயிற்று. அவர்கள் கொள்கையளவில் வேறுபட்டே நின்றார்கள். அவர்களால் பௌத்தத்தின் பெருமைக்கு மாசு நேர்ந்தது.

அசோகர் :

'வரலாற்றில் மண்டிக்கிடக்கும் மன்னர் பெயர் களுள் அசோகரின் பெயர் தனிப் பெருமையுடன் ஒப்பற்ற விண்மீனய் ஒளிவிட்டுத் திகழ்கின்றது,' என்று பேராசிரியர் எச். ஜி. வெல்ஸ் அவர்களால் பாராட்டப்பட்ட பெருமையுடையவர் அசோகர். அவர் கி. மு. 207 இல் அரியணை ஏறினர். இந்திய நாட்டில் பெரும்பகுதியில் அவர் வெண்கொற்றக் குடை நிழல் செய்தது. தென்னிந்தியா மட்டுமே அவர் ஆட்சிக்கு அடங்காது தனித்து நின்றது. அவர் தெற்கிலும் தம் ஆணையைச் செலுத்த எண்ணிக் கலிங்க நாட்டின்மீது படை எடுத்தார். கலிங்கர் 'கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும்' ஆற்றல் படைத்தவர்கள். அவர்கள் அசோகரை எதிர்த்துக் கடும்போர் விளைவித்தார்கள். அப்போரில் பல நூருயிரம் கலிங்க வீரர்கள் கொல்லப்பட்டார்கள். கரிகளும் பரிகளும் எண்ணிறந்தன மாண்டொழிந்தன. குருதி வெள்ளம் கரை புரண்டோடியது. இந்தத் துன்பியல் காட்சி அசோகர் உள்ளத்தை உருக்கியது. அவர் இறந்த உயிர்களுக்காக இரங்கினர். அவரது வீர நெஞ்சம் ஈர நெஞ்சமாய் மாறியது. அவர் புதிய மனிதரானர். 'இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யும்' சால்பு அவர் உள்ளத்தை ஆட்கொண்டது. அவர் தம் மதக் கொள்கைகளையும் மாற்றிக் கொண்டார். அருளறத்தை அடிப்படையாகக் கொண்ட பௌத்தமே அவர் உள்ளத்துக்கு உகந்த மதமாயிற்று. அசோகர்

பௌத்தரானுர். அவர் தம்மைப் போலவே உலக மக்கள் அனைவரும் புத்தரது அருள் நெறியைத் தழுவி உய்தல் வேண்டும் என்று விரும்பினுர். ஆகையால், அந்நெறியை அகில உலகிலும் பரப்பும் பணியில் ஈடுபட்டார்.

## தொண்டு :

அசோகர் முதலில் தம் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் மாற்றி அமைத்தார்; அரண்மனையில் தொன்று தொட்டு நிகழ்ந்து வந்த தீய வழக்கங்கள் பலவற்றை நீக்கினுர்; வேட்டையாடுவதை அறவே ஒழித்தார்; பௌத்த நெறிக்கு ஏற்ற புதிய வழக்கங்களை மேற்கொண்டார். இவ்வாறு தூய வாழ்க்கையைத் தொடங்கி அசோகர் ஒரு துறவியைப்போல வாழ்ந்து வரலானுர். அவர் முதலில் தம் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளிலெல்லாம் பௌத்த நெறியைப் பரப்பத் திட்டமிட்டார். அவர் துறவிகளும், அந்தனர்களும் பின்தொடரப் புனிதச் செலவை மேற்கொண்டு தம் குடிகளுக்குப் பௌத்த நெறியைப் புகட்டினுர். மக்கள் பெருந்திரளாகக் கூடி மன்னர் மொழியைச் செவிமடுத்துப் பௌத்தத்தைப் போற்றினுர்கள். பௌத்தம் மிக வேகமாகப் பரவியது. அசோகருக்குக் கடல் கடந்த நாடுகளிலும் பௌத்தத்தைப் பரப்பவேண்டும் என்னும் எண்ணம் பிறந்தது. அதற்குப் பௌத்த பிக்குகளிடையே இருந்துவந்த குழப்பமான சூழ்நிலை இடையூருய் இருந்தது. அவர் முதலில் அந்நிலையை மாற்று

வதற்குத் திட்டமிட்டார்; அதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டினர். அம்மாநாட்டிற்குப் பரத கண்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பிக்குகள் வரவழைக்கப்பட்டார்கள். இது கௌதமர் மறைவிற்குப்பின் நடந்த மூன்ருவது மாநாடு. இது பாடலிபுரத்தில் நடந்தது. இம்மாநாட்டின் வெற்றிக்கு அசோகரது செல்வாக்குப் பெரிதும் பயன்பட்டது. அசோகரது அருமுயற்சியால் பிக்குகள் ஒன்றுபட்டனர். அவர்கள் கடமை உணர்ச்சியோடு தொண்டாற்ற முன் வந்தார்கள். அசோகர் அவர்களுள் ஆன்று அவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேர்களைத் தேர்ந்தெடுத்து, அயல் நாடுகளுக்கு அனுப்பினர். அவர்களுள் சிலர் கடல்கடந்து இலங்கை சென்றனர். அசோகர் தம் புதல்வரான மகேந்திரரையும் புதல்வியாரான சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினர். அவர்கள் இலங்கையை அடைந்து, பிக்குகளோடு சேர்ந்து அங்குப் பௌத்தத்தைப் பரப்பினர்கள். இவ்வாறே பௌத்த பிக்குகள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் பௌத்தத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அசோகர் தம் கொள்கைகள் என்றும் அழியாதிருக்குமாறு பாறைகளிலும் கற்றூண்களிலும் அவற்றைச் செதுக்கி வைத்தார்; பல கலைக் கோவில்களைக் கட்டினர். இன்னும் அவர் பௌத்தத்தைப் பரப்புவதற்குச் செய்த ஆற்றல் மிக்க தொண்டுகள் பலவாகும். அவற்றை வரலாற்று நூல்கள் பலபட விரித்துரைக்கின்றன. அன்றியும், அம்மன்னர் பௌத்தத்தைப் பரப்புவதற்கு எழுப்பிய கலைச் சின்னங்

களும் கல்வெட்டுக்களும் இன்றும் நாட்டின் பல இடங்களில் காணப்படுகின்றன. அவை உணர்வும் உயிரும் கொண்டு அன்று அசோகர் ஆற்றிய தொண்டின் ஆற்றலை நம்மிடம் எடுத்து உரைக்கின்றன. சுருங்கக் கூறின், அசோகர் அன்று ஆற்றிய தொண்டே, இன்றுவரை அகில உலகிலும் பௌத்தம் அழியாது பரவி இருப்பதற்கு ஏதுவாயிற்று என்று இயம்பலாம். இவ்வாறு சீரும் பேரும் சிறக்கச் சமயத் தொண்டாற்றிச் செங்கோலாட்சி புரிந்த அசோகர் கி. மு. 225-இல் விண்ணுலக விருந்தினரானர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அவர் வானுறையும் தெய்வத்துள் ஒருவராய் விளங்குவார் என்பதற்கு ஐயமுளதோ?

*கனிஷ்கர்:*

பௌத்தத்தைப் பரப்பிய பணியில் கனிஷ்கருக்கும் முக்கியப் பங்குண்டு. அவர் காலத்தில் பௌத்தம் இரு பிரிவுகளாய் இயங்கிற்று. அவை ஈனயானம், மகாயானம் என்பன. ஈனயானத்தினர் புத்தரை ஓர் ஆசிரியராகக் கொண்டு போற்றினர். மகாயானத்தினர் புத்தரைக் கடவுளாகக்கொண்டு வழிபட்டனர். கனிஷ்கர் மகாயானப் பௌத்தத்தைத் தழுவினர். அவர் அம்மதத்தைப் பரப்பும் பணியில் பெரிதும் ஈடுபட்டிருந்தார். அவர் காலத்தில் மகாயான பௌத்தம் உலகின் பல பாகங்களிலும் பரவிற்று. கனிஷ்கரும் சமயப்பணி புரிவதற்காகப் பல ஆசிரியர்களை நியமித்திருந்தார்.

### பல்கலைக் கழகங்களது பணி :

கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் தட்சசீலத்தி லும், நாளந்தாவிலும் இருந்த பல்கலைக் கழகங் களைப்பற்றிய செய்திகள் வரலாற்றில் பரக்கக் காணப்படுகின்றன. அப்பல்கலைக் கழகங்கள் பௌத்தத்தைப் பரப்பும் பணியில் பெரிதும் ஈடு பட்டிருந்தன. சீனு, ஜப்பான், மங்கோலியா, கொரியா முதலிய நாடுகளிலிருந்து மாணவர் பலர் பௌத்தத்தைக் கற்றுத் தெளிய நாளந்தாவை நாடி வந்தனர். நாளந்தாவில் மட்டும் பதினுயிரம் மாணவர்கள் பௌத்தத்தைக் கற்று வந்தார்கள் என்பது தெரியவருகிறது. கி.பி. ஏழாம் நூற்றுண் டில் இந்தியாவிற்கு வந்த சீன வழிப்போக்கரான யுவான்சுவாங்கு என்பவர் அப்பல்கலைக் கழகத் திலேதான் பௌத்தத்தைக் கற்றுத் தேர்ந்தார். அவர் அங்குப் பன்னிரண்டு ஆண்டுகள் கற்ருர் என்பர். அவருக்குப் பிறகு சீனுவிலிருந்தும் கொரியாவிலிருந்தும் பலர் அப்பல்கலைக் கழகத் தில் வந்து கற்றனர். காஷ்மீர நாட்டிலுள்ள இராச விகாரம் என்னும் இடத்தில் புத்தமதப் பல் கலைக் கழகம் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. கலைக் கழகங்கள் எல்லாம் பௌத்தத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தமையால், பாரில் பௌத் தத்தின் மதிப்பு உயர்ந்தது.

### இலங்கை :

தீவுகளுள் இளவரசியாய் எழிலுடன் விளங்கு வது இலங்கை. இன்று இலங்கை வாழ் மக்களில்

பெரும்பாலார் புத்த மதத்தைத் தழுவியுள்ளனர். அசோகர் தம் மக்களையும் பிக்குகளையும் இலங்கையில் சமயப்பணி ஆற்ற அனுப்பினர் அல்லவா? அவர்களது பணியால் அங்குள்ள இந்துக்களுள் பலர் பௌத்தராயினர். அன்றியும், அரசிளங் குமரர் ஒருவர் தாய்நாடு துறந்து, தம் நாடு போந்து பௌத்தத்தைப் பரப்புகிறர் என்பதை அறிந்த இலங்கை வேந்தரான டிஸ்ஸா என்பவர் பௌத்தத்தைத் தழுவினர். 'மன்னர் எவ்வழி குடிகள் அவ்வழி' அல்லவா? இலங்கை மக்கள் மன்னரைப் பின்பற்றிப் புத்த மதத்தைத் தழுவினர்கள். மகேந்திரர்மீது கொண்ட மதிப்பால் இலங்கை வேந்தர் பௌத்தத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டார். அவர் பிக்குகள் தங்கிப் பணிபுரிவதற்காகத் தம் தலைநகரான அனுராதபுரத்திற்கருகில் பௌத்தமடம் ஒன்றைக் கட்டினர். அம்மடம் புத்த சமயப் பணி புரிவோர்க்கு நிலைக்களமாகப் பயன்பட்டது. மேலும், அம்மன்னர் அனுராதபுரத்தில் 'தூபராமதகோபா' என்னும் ஆலயம் ஒன்றை அழகுறக் கட்டி முடித்தார். அந்த ஆலயத்தில் புத்தரின் புனிதத் தோள் எலும்புகள் வைக்கப்பட்டுள்ளன. கி. பி. மூன்ரும் நூற்ருண்டில் கண்டி நகரில் மற்ருெரு கோவில் கட்டப்பட்டது. அக் கோவிலில் புத்தரின் புனிதப் பல் வைத்துக் காக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. உலகிலுள்ள பௌத்த ஆலயங்களுள் அதுவே உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அவ்வாலயம் உலகிலுள்ள பௌத்தர்களின் உள்ளங்களை எல்லாம் கவர்ந்து நிற்கிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான

பௌத்தர்கள் அந்த ஆலயத்தில் வந்து தொழுகை நடத்திச் செல்வதை இன்றுங் காணலாம். அக் கோவிலைத் தன்னுள் கொண்டிருக்கும் பெருமை யால் கண்டி நகரம் பௌத்தர்களின் புனித 'மெக்கா'வாய் விளங்குகிறது; இலங்கைத் தீவு பௌத்தர்களின் புகலிடமாய்ப் பொலிகின்றது. இன்று இலங்கையில் பௌத்த சங்கங்கள் பல சமயப்பணி புரிந்து வருகின்றன. அச்சங்கங்கள் பிற நாடுகளிலும் பௌத்தத்தைப் பரப்பும் பணி யில் ஈடுபட்டிருக்கின்றன. எதிர்கால உலகில் பௌத்தம் சிறப்பதற்கு இலங்கை வழிகாட்டும் என்பது உறுதி.

*பர்மா :*

'பொன்னுலகு' என்று போற்றப்படுகின்ற பெருமையுடையது பர்மா. அங்கு அசோகர் அனுப்பிய தூதர்கள் சென்று பௌத்தத்தைப் பரப்பினார்கள். கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் அந் நாட்டை ஆண்ட அனவ்ரஹ்தா என்னும் மன்னர் பௌத்தரானார். அவர் தம் தலைநகரான பேகனில் பகோடா என்னும் பௌத்தப் பெருங் கோவிலைக் கட்டினார். அவர் காலத்தில் பர்மாவில் பௌத்தம் வேரூன்றித் தழைத்தது. பின்னர் மங்கோலியர்கள் பர்மாவின்மீது படையெடுத்தமையால், அங்குப் பொளத்தம் சிறிது சிதைவுற்றது. ஆயினும், 15–ஆம் நூற்றாண்டில் பௌத்தம் மீண்டும் புத் துயிர் பெற்றுத் தழைத்தது. அப்போது அந்நாட்டு மன்னராய் இருந்த ராமபதி என்பவர் பௌத்தத்

தைப் பரப்பும் பணியில் பெரிதும் ஈடுபட்டார். அவர் பதினொரு பிக்குகளையும், தூதுவரையும் இலங்கைக்கு அனுப்பிய வரலாறு அந்நாட்டுக் கல்வெட்டு ஒன்றால் அறியப்படுகிறது. அம்மன்னர் ஆற்றிய தொண்டால் பர்மா ஒரு பௌத்த நாடாகத் தலையெடுத்தது. ஆங்கில ஆட்சிக் காலத்திலும் அந்நாட்டில் பௌத்தத்திற்கு எவ்விதக் குறைவும் நேரவில்லை. இன்றும் சுதந்தர பர்மாவிலும் பௌத்தம் தலைமை பெற்று விளங்குகின்றது. பர்மியர்கள் பௌத்த நெறியே உலகை உய்விக்கும் நெறி என்று உறுதியாக நம்புகிறார்கள்.

*சயாம் :*

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சயாம் நாட்டில் பௌத்தம் பரவி இருந்தது. கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் அந்நாட்டு மன்னர் பௌத்தரானார். அவர் பௌத்தத்தைப் பரப்பக் கருதிச் சங்கம் ஒன்றை நிறுவினார். இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட பிக்கு ஒருவர் அச்சங்கத்தின் தலைவராய் அமர்ந்தார். மன்னரது முயற்சியாலும் அச்சங்கம் ஆற்றிய தொண்டாலும் சயாம் நாட்டு மக்களுள் பெரும் பகுதியினர் பௌத்தராயினர். அந்நாட்டுப் பிக்குகள் மஞ்சள் நிறக் காவியுடை அணிந்து மக்கள் மனங் கவரும் தோற்றத்தோடு பொலிந்தார்கள். அவர்கள் அன்பு நெறி நின்று ஆற்றிவந்த தொண்டால் அந்நாட்டில் பௌத்தம் வழிவழியாக வாழ்ந்துவந்தது. இன்று புதிய சங்கங்கள்

பல தோன்றி அங்குப் பௌத்தத்தை வளர்க்கின்றன. அச்சங்கங்களுக்கு அரசியலாரின் ஆதரவும் கிடைத்துள்ளது. அச்சங்கங்களைச் சார்ந்த பிக்குகள் ஆங்கிலம் கற்றுப் பௌத்தத்தைப் பாரெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்கள். அவர்களுக்கு உறுதுணையாகச் சயாம் நாட்டு வானொலி நிலையங்கள் புத்த மதத் தத்துவங்களை வாரந்தோறும் ஒலிபரப்பி வருகின்றன. அந்நாட்டுத் தலைநகரான பாங்காக்கில் பௌத்தக் கோவில் ஒன்று கலைத்திறன் மிக்கதாய், காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் வனப்புடையதாய் விளங்குகின்றது. அவ்வாலயத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வந்து வழிபாடு நடத்திச் செல்கின்றனர்கள்.

சீனு :

உலகிலுள்ள பெரிய நாடுகளுள் சீனுவும் ஒன்றுகும். அந்நாடு ஆசியாக் கண்டத்தின் நான்கிலொரு நிலப்பரப்பைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவது. அங்குக் கி.பி. முதல் நூற்றுண்டிலேயே பௌத்தம் பரவி இருந்தது. அப்போது சீன மன்னராய் இருந்த மிங்-டி என்பவர் இந்தியாவிலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்துப் பௌத்தத்தைத் தம் நாட்டில் பரப்ப முயன்றுர். அக்காலத்தில் சீன மக்கள் டாயிஸம் (*Taoism*) கன்புயூஸியனிஸம் (*Confusianism*) என்னும் மதங்களைத் தழுவி இருந்தமையால், பல ஆண்டுகள்வரை பௌத்தம் சீன மண்ணில் பரவவில்லை.

பின்பு குமரஜீவா என்பவரின் பெருமுயற்சியால் சீன மொழியில் பௌத்த மத நூல்கள் பல மொழி பெயர்க்கப்பட்டன. அந்த நூல்களைப் படித்துப் பௌத்தத்தின் பெருமையை உணர்ந்த சீன மக்கள் பௌத்தரானார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து புத்த மதம் சீன மக்களைப் பெருவாரியாகக் கவரலாயிற்று. அதுமுதல் பிக்குகள் பலர் இந்தியாவிலிருந்து சீனாவிற்குச் சென்றார்கள். அவர்கள் மருத்துவக் கலையில் வல்லவர்கள் ; சீன மக்களுக்கு மருத்துவ உதவி அளித்ததோடு, புத்த மதத்தையும் புகட்டி வந்தார்கள். அவர்களது அருமுயற்சியால் பௌத்தம் சீனாவில் வேரூன்றித் தழைத்தது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை அங்குப் பௌத்தம் நல்வாழ்வு வாழ்ந்து வந்தது. அதன் பின்பு பல வேறு காரணங்களால் பௌத்தம் அங்குச் சிறப்பிழந்தது. இன்று சீன நாடு பொதுவுடைமை நாடாய்த் திகழ்கின்றது. பொதுவுடைமை நாட்டில் மதம் வாழ இடமுண்டா என்பதைக் கால தேவனே முடிவு செய்தல் வேண்டும் !

### *ஜப்பான் :*

இயற்கை எழில் அனைத்தும் ஒருங்கு அமையப்பெற்ற நாடு ஜப்பான். அந்நாடு 1,48,742 சதுர மைல் நிலப்பரப்புடையது. அங்கு எட்டுக்கோடி மக்கள் வாழ்கிறார்கள். அந்நாட்டில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் புத்த மதம் பரவியதாக வரலாறு கூறுகிறது. அப்போது

ஜப்பான் நாட்டு இளவரசராய் இருந்த ஷோ-டோகு என்பவர் புத்த மதத்தைத் தழுவினர். அவர் பௌத்தத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார்; பௌத்த ஆலயங்கள் பலவற்றைக் கட்டினர்; புத்தர் சிலைகளை நிறுவினர்; பௌத்த நூல்கள் பலவற்றிற்கு விளக்கவுரை எழுதினர். இவ்வாறு தொண்டாற்றிய இளவரசரது அருமுயற்சியால் பௌத்தம் ஜப்பானில் நன்கு வேரூன்றியது. ஆனல், நாளடைவில் பௌத்தம் பிளவுபட்டுப் பல பிரிவுகளாய் இயங்கலாயிற்று. அம்மதத்தில் ஆழ்ந்த பற்றுடைய கர்னல் ஆல்காட்டு என்பவர், அம்மதம் அழிவுப் பாதையில் செல்வதை உணர்ந்து, அதை ஒழுங்குபடுத்த எண்ணினர். அவர் 1891-இல், 'புத்த மதத்தின் பன்னிரண்டு அடிப்படைக் கொள்கைகள்' என்னும் ஒரு நூலை எழுதினர். அந்நூற்கருத்துக்கள் பௌத்தத்தின் பல்வேறு பிரிவினர்க்கும் பொருந்தும் முறையில் அமைந்திருந்தன. அதனல், கர்னல் ஆல்காட்டு அவர்களது கருத்தை ஏற்றுப் புத்த மதத்தினர் அனைவரும் ஒன்றுபட்டனர் பௌத்த சங்கங்களும் ஒருமை உணர்ச்சியோடு தொண்டாற்ற முன்வந்தன. அதுமுதல் ஜப்பானில் பௌத்தம் புதிய உருப்பெற்றுப் பொலியலாயிற்று. இரண்டாவது உலகப் பெரும்போரில், இந்நாடு, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கூட்டு வன்மையை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றது. அதனல், அமெரிக்கப் படைவீரர் ஆட்சியின்கீழ் ஜப்பான் ஐந்தாண்டுகள் வரை இருக்க நேர்ந்தது. அப்போது ஜப்பானி

யரைக் கிறித்தவ மதத்தை ஏற்கும்படி செய்வதற்கு அமெரிக்கர் பலவாறு முயன்றனர். அவர்கள் செய்த எல்லா முயற்சிகளும் தோல்வியுற்றன. ஜப்பானியர் இன்னும் பௌத்தத்தில் நம்பிக்கை யுடையவர்களாய், அதுவே உலகை உய்விக்கும் மதம் என்னும் உறுதியோடு வாழ்கிறார்கள். அவர்கள் ஜப்பானைப் பார்வையிடச் செல்லும் பிற நாட்டவர்களிடமும் பௌத்த மத நூல்களைக் கொடுத்துப் படித்துணருமாறு வேண்டுகிறார்கள்.

*பிற நாடுகளில் :*

பௌத்த மதம் பாரதத்தில் தோன்றியபோதி லும், பிற நாடுகள் பலவற்றிலும் பரவியுள்ளது; திபெத்து, பூட்டான், சிக்கிம், ஜாவா, சுமத்திரா, கம்போடியா முதலிய நாடுகளிலும் பரவியுள்ளது. உலகிலேயே மிகப் பெரிய பௌத்த ஆலயம் ஜாவாவிலேதான் இருக்கிறது. ஒன்பதாம் நூற் றாண்டின் தொடக்கம் வரையில் பௌத்த மன்னர் கள் ஆட்சியில் ஜாவா இருந்துவந்தது. அக் காலத்தில் இக்கோவில் கட்டப்பட்டிருக்கவேண் டும். பொரபுதூர் *(Borobudur)* என்னும் இக் கோவிலின் கலைச் சிறப்பு உலகப் புகழ்பெற்றுள் ளது. இக்கோவிலில் கலைத்திறன் மிக்க நானூற்று முப்பத்தாறு புத்த சிலைகள் செதுக்கப்பட்டுள் ளன; சுற்றுச் சுவர்களில் புத்தர் வாழ்க்கை வர லாறு நூற்றிருபது காட்சிகளாகச் செதுக்கப்பட் டுள்ளது. இது மூன்று மைல் நீளத்தில் அமைந் திருப்பதாகக் கூறப்படுகிறது. இத்தகைய கலைச்

செல்வங்கள் நிரம்பிய இக்கோவில் இன்னும் அழியா அழகொடு விளங்கி, ஜாவாவிற்குப் பெருமை தருகிறது. திபெத்து இன்னும் ஒரு பௌத்த நாடாகவே விளங்குகிறது. அங்குப் பௌத்தம் அரசியல் உரிமை பெற்று உயர்ந்



துள்ளது. மேலும், இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிற்கூட, பௌத்தம் இன்று பரவியுள்ளது. அந்நாடுகளிலெல்லாம் பௌத்த நெறியை விரும்பிப் பின்பற்றுகின்றவர்கள் இருக்கிருர்கள். இவ்வாறு பௌத்தம் பாரெங்கும் பரவியுள்ளது. இன்றைய உலகில் மற்றெந்த

மதத்தினரையும்விடப் புத்த மதத்தினரே மிகுதியாய் இருக்கிறார்கள்.

முடிவுரை :

புத்தர் பூவுலக வாழ்வை நீத்து இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆயினும், அவர் அன்று மக்கள் வாழ்க்கை விளக்கம் பெறுவதற்கென்று ஏற்றி வைத்த அணையா விளக்கின் ஒளி இன்னும் அகில உலகிலும் வீசிக்கொண்டிருக்கின்றது. ஏன்? அவர் தமக்கென ஒன்றின்றி எல்லாவற்றையும் தியாகம் செய்து பிறர்க்கென வாழ்ந்த பெருமையாலேதான் அகில உலகமும் அவரைப் போற்றுகின்றது. அவர் அரசராய் இருந்து அகில உலகையும் ஒரு குடைக்கீழ் ஆண்டிருந்தாலும், இன்று உலகம் அவரை இவ்வாறு போற்றுதன்றோ?

'நல்லவை நாடு; தீயவை நீக்கு; உள்ளத் தூய்மை பெறு; அன்பைக் கொண்டு அகிம்சையைக் கடைப்பிடி,' என்று புத்தரது வான் குரல் தனி மனிதனைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அது மன்னர் மன்னருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்டது. அசோகர் ஆட்சியை அருளாட்சியாக மாற்றியது எது? அசோகர் புத்தரது அற நெறியைத் தம் நாட்டு மக்களது வாழ்வு நெறி

யாக அமைத்தமையால் அல்லவா அவர் நாட்டில் அறம் காவல் புரிய அன்பு ஆட்சி நடத்தியது? இன்றுவரை உலக வரலாற்றில் போர்ப் பொறிகள் இன்றி அன்பு நெறியால் ஆட்சி நடத்திய நாடு, புத்தர் அருள் நெறியை ஏற்ற அசோகர் நாட்டைத் தவிர வேறு நாடுமுளதோ? இனியேனும், அசோகர் ஆட்சிக்கு நிகரான ஆட்சி உலகில் நிலவும் காலம் வருமா? அத்தகைய ஆட்சி முறையைப் புத்தரைப் பெற்றெடுத்த பாரதமே அகில உலகிற்கும் அறிவுறுத்துதல் வேண்டும். பாரதத்தின் மணிக்கொடியில் பொறிக்கப்பட்டுள்ள அசோக சக்கரம் அதைத்தானே அகில உலகிற்கும் அறிவுறுத்துகின்றது?

வளர்க புத்தர் அருள் நெறி!
வாழ்க பாரத மணித் திருநாடு!

# கட்டுரைப் பயிற்சி

## கட்டுரைகளும் நினைவுக் குறிப்புகளும்

**1. சித்தார்த்தர் பிறப்பு :**

(1) முன்னுரை, (2) பெற்றோர், (3) கவலையும் கனவும், (4) மறையவர் உரை, (5) சித்தார்த்தர் பிறப்பு, (6) முடிவுரை.

**2. சுத்தோதனர் மகிழ்ச்சி :**

(1) முன்னுரை, (2) குழந்தை பிறத்தல், (3) மகனை மாளிகைக்கு அழைத்து வரல், (4) முனிவர் பாராட்டுரை, (5) பெயர் சூட்டல், (6) முடிவுரை.

**3. சித்தார்த்தரது இளமை வாழ்க்கை :**

(1) முன்னுரை, (2) கல்விப் பயிற்சி, (3) நாஞ்சில் விழா, (4) அருள் உள்ளம், (5) இன்ப வாழ்க்கை, (6) திருமணம், (7) முடிவுரை.

**4. சித்தார்த்தர் கண்ட துன்பக் காட்சிகள் :**

(1) முகவுரை, (2) சுற்றுலா, (3) முதற்காட்சி, (4) இரண்டாம் காட்சி, (5) மூன்றும் காட்சி, (6) துறவு எண்ணம், (7) முடிவுரை.

**5. சித்தார்த்தர் துறவு :**

(1) முன்னுரை, (2) மனப்புயல், (3) மனத்துணிவு, (4) வெளியேற்றம், (5) துறவு பூணல், (6) முடிவுரை.

**6. கௌதம முனிவரும் மகத மன்னரும் :**

(1) முன்னுரை, (2) கௌதமர் ஆட்டு மந்தையைக் காணல், (3) யாகசாலையை அடைதல், (4) அறிவுரை, (5) மன்னன் மனமாற்றம் அடைதல், (6) முடிவுரை.

**7. கௌதம முனிவர் கடுந்தவம் புரிதல் :**

(1) முகவுரை, (2) உருவேலா வன முனிவர்கள், (3) பட்டினித்தவம், (4) கருத்து மாற்றம், (5) ஆயர் குல மங்கை, (6) முடிவுரை.

**8. கௌதம முனிவர் புத்த பதவி பெறுதல் :**

(1) முகவுரை, (2) மாரனை வெல்லல், (3) ஞானத் தவம், (4) கண்ட உண்மைகள், (5) புத்த பதவி, (6) முடிவுரை.

**9. கபிலை நகரில் புத்தர் :**

(1) முகவுரை, (2) புனிதச் செலவு, (3) கபிலை நகரடைதல், (4) அறவுரை, (5) இராகுலனுக்குத் துறவு வழங்கல், (6) நந்தன் பௌத்த சங்கத்தில் சேர்தல், (7) சுத்தோதனர் வேண்டுகோள், (8) முடிவுரை.

**10. புத்தர் பெருநெறி அடைதல் :**

(1) முகவுரை, (2) சந்தகன் செய்த விருந்து, (3) குசி நகர் அடைதல், (4) ஆனந்தனுக்கு அறிவுரை, (5) பெரு நெறி அடைதல், (6) செந்தழற்படுத்தல், (7) முடிவுரை.

**11. பாரெங்கும் பௌத்தம் :**

(1) முகவுரை, (2) அசோகர் அருமுயற்சி, (3) கனிஷ்கர் தொண்டு, (4) பல்கலைக் கழகங்களது பணி, (5) கீழ் நாடுகளில் பௌத்தம், (6) மேல் நாடுகளில் பௌத்தம், (7) முடிவுரை.

6A
84-20